வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer - மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER - றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER - வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 04.10.2024 வெள்ளிக்கிழமை | இதழ் : 278 | பக்கங்கள் : 12

# வரி நிவாரணங்களை வழங்குவதற்கு திட்டம்

## ஐ. எம். எவ்விடம் ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு, ஒக்ரோபர் 04

தனது அரசாங்கம் வற், வருமான வரி நிவாரணங்களை மக்களுக்கு வழங்கத் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நாட்டுக்கு வந்துள்ள ஐ.எம்.எவ். குழுவினரிடம் தெரிவித்துள்ளார். 11

## வேட்புமனுத் தாக்கல் இன்று முதல் ஆரம்பம்

கொழும்பு, ஒக். 04

பாராளுமன்ற பொதுத்தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களின் வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வது இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

வேட்பு மனுக்கள் ஏற்கும் பணி இன்று முதல் 11 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை மாவட்ட தேர்தல் அலுவலர் அலுவலகங்களில் நடைபெறும்.

தேர்தலில் போட்டியிடுவதற்காக 37 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

11 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்குப் பிறகு, வேட்பு மனுத் தாக்கல் மற்றும் அனைத்து குழுக்களுக்கும் ஆட்சேபனை தெரிவிக்க ஒரு மணி நேரம் அனுமதிக்கப்படும்.

தேர்தல் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறும், புதிய பாராளுமன்றம் நவம்பர் 21 ஆம் திகதி கூடும். (அ)

## ஒரு கோடி ரூபாய் வழிப்பறி; சந்தேகநபர்கள் மூவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 04

மானிப்பாய் - சங்குவேலியில் ஒரு கோடியே 7 இலட்சம் ரூபாயை வழிப்பறி செய்த இருவரையும் இதற்கு மூளையாக பின்னணியில் செயல்பட்ட நபரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற இந்த வழிப்பறி சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

ஜேர்மனியில் இருந்து வந்த நபர் ஒருவர் சேந்தாங்குளம் பகுதியிலிருந்த தனது 11

## எமது போராட்டத்தை ஒடுக்குவதற்கு திட்டம்

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் சாடல்

வவுனியா, ஒக். 04

நீதி கோரிய தமது போராட்டத்தை ஒடுக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டியுள்ள வடக்கு, கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கங்கள், இந்த செயலை தாம் கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

வடக்கு, கிழக்கில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள், 39இற்கும் மேற்பட்ட கைக்குழந்தைகளுக்கு என்ன நடந்தது என வும் நேற்று வியாழக்கிழமை வவுனியாவில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர்கள் 11

## ஊழல் கலாசாரம் நீடித்தால் ஜப்பான் முதலீட்டை நிறுத்தும்!

ஜப்பானிய தூதுவர் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 04

இலங்கையில் ஊழல் கலாசாரம் நீடித்தால் ஜப்பானின் முதலீடுகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்று இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹடேகி எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இலங்கை முதலில் வெளிநாட்டு அழுத்தங்களின் மூலம் கிடைக்ககூடிய சாதக தன்மையை பயன்படுத்திக் கொள்ளவேண்டும். சர்வதேச சமூகத்தின் அழுத் தங்கள் இல்லாமல் ஜப்பான் பல 11

## கடந்த பாராளுமன்றத்தில் 241 எம். பிக்கள் அங்கத்துவம்!

கொழும்பு, ஒக். 04

அண்மையில், கலைக்கப்பட்ட இலங்கையின் 9ஆவது பாராளுமன்றத்தில் மொத்தமாக 241 பேர் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்துள்ளனர்.

2020 ஒகஸ்ட் 20ஆம் திகதி ஆரம்பமான 9ஆவது பாராளுமன்றம் கடந்த செப்ரெம்பர் 24ஆம் திகதி நிறைவுறுத்தப்பட்டு கலைக்கப்பட்டது.

பாராளுமன்ற காலத்தில் 16 சந்தர்ப்பங்களில் 19 பாராளுமன்ற உறுப்பினர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் அடிப்படையில் முதலில் தெரிவான 225 உறுப்பினர்களுக்கு மேலதிகமாக 19 பேர் பாராளு மன்ற உறுப்பினர்களாக இருந்துள்ளனர்.

முன்னைய பாராளுமன்ற உறுப்பினர்கள் 11

## கிளிநொச்சி வாகன விபத்து; 3 பிள்ளைகளின் தந்தை பலி!

பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதியது

கிளிநொச்சி, ஒக். 04

கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கண்ணகி நகர் பகுதியில் நேற்று காலை விபத்து இடம்பெற்றுள்ளது.

ஆடை தொழிற்சாலைப் பணியாளர்களை ஏற்றி கிளிநொச்சி நோக்கிப் பயணித்த பஸ்ஸுடன் எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் பலத்த காயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் தலைக் கவசமின்றி பயணித்த நிலையில் அவர் அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளார். விபத்தில் தர்மபுரம், குமாரசாமிபுரம் பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 11

## இலங்கைமீது சர்வதேச கண்காணிப்பு அவசியம்!

ஜெனிவாவில் பிரேரணை கோருகிறது மனித உரிமைகள் கண்காணிப்பகம்!

புதுடில்லி, ஒக். 04

இலங்கையை தொடர்ந்தும் சர்வதேசத்தின் கண்காணிப்பில் வைத்திருக்கும் வகையிலான பிரேரணை ஒன்றை நிறைவேற்றுமாறு ஐ. நா. மனித உரிமைகள் பேரவையை சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில், மனித உரிமைகள் 11

## ஐ. த. தே. கூட்டணியும் கொழும்பில் போட்டி!

கொழும்பு, ஒக். 04

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் சங்கு சின்னத்தில் போட்டியிடும்ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி கொழும்பு மாவட்டத்திலும் போட்டியிடுவது குறித்து ஆராய்ந்து வருவதாக அந்தக் கட்சியின் பங்காளிக் கட்சியான ஈ. பி. ஆர். எல். எவ்வின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். 11

## மதுபாவனையால் ஆண்டுக்கு 20 ஆயிரம் பேர் வரை மரணம்!

கொழும்பு, ஒக். 04

மதுபான பாவனையால் நாட்டில் தினமும் 50 பேர் இறக்கின்றனர். வருடாந்தம் 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் பேர் வரை உயிரிழக்கின்றனர் என்று மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், மதுபான பாவனையால் அரசாங்கத்துக்கு வருடாந்தம் 2 ஆயிரத்து 370 கோடி ரூபாய் சுகாதார மற்றும் பொருளாதார செலவினங்கள் ஏற்படுகின்றன என்றும் அந்த அமைப்பு 11

## ஐ.தே.க. கூட்டணியின் சின்னம் 'சிலிண்டர்'?

யானை இல்லாத முதல் பொதுத் தேர்தல்!

கொழும்பு, ஒக். 04

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணி எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் களமிறங்கும் என்றும் இதற்கான அனுமதி கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன் மூலம், 1947ஆம் ஆண்டு முதல் நடந்த அனைத்துப் பாராளுமன்றத் தேர்தல்கள் அனைத்திலும் ஐக்கிய தேசியக் கட்சி களமிறங்கிய யானை சின்னம் இல்லாத முதலாவது பொதுத் தேர்தலாக இது அமையவுள்ளது.

சிலிண்டர் சின்னத்தில் களமிறங்கும் இந்தக் கூட்டணிக்கு ரணில் விக்கிரமசிங்கவே தலைமை 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

நண்பர் ஒருவரிடம் கேட்டேன், "தமிழ் அரசு மற்றைய கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருப்பது மான சீகமான விருப்பத்துடன் என்று நினைக்கிறீர்களா?" என்று.

அந்த நண்பர், தமிழ் அரசின் "முக்கிய" தலைவர் ஒருவருடன் நெருக்கமான நட்பு வட்டத்தில் இருப்பவர். அவரிடம் கேட்டால் தான் உண்மையை அறியலாம் என்பது எனது கணிப்பு. அவர் எந்தவித தயக்கமும் இன்றி சொன்னார், "அது முழங்கையில் பிடிக்கும் பிடி போன்றது" என்று.

ஒரு பேச்சுவழக்கில் சொல்வார்கள், முழங்கையில் பிடிப்பது என்று. அதாவது, பிடிப்பது போலவும் இருக்கும் கை வழுக்கிக்கொண்டு வந்துவிடும் அது பிடிபடாது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தில் எல்லா தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒற்றுமையாக இருந்ததுபோலவும் தமிழ் அரசு கட்சி மட்டுமே வெளியே இருந்ததுபோலவும் ஒரு தோற்றம் இருந்தது. (இங்கே முன்னணியினர் கவனத்தில் கொள்ளப்படவில்லை. அவர்கள் எப்போதுமே தாங்களே இருபத்தி நான்கு 'கரட்' தமிழ்த் தேசியத் தங்கங்கள் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள்- அவர்களை விட்டுவிடுவோம்).

அதனால், தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் அரசு ஒற்றுமையை விரும்புவதில்லை என்பதுபோல ஒரு தோற்றம் ஏற்பட்டிருந்தது. அதனை போக்குவதற்காகவே, தாங்களாகவே ஒற்றுமைப்படுவதற்காக அழைப்பு விடுப்பதுபோல அழைப்பை விடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கும் தெரியும் மற்றையவர்கள் அந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பது. இப்போது தாங்கள் ஒற்றுமையாக செயல்பட தயாராக இருப்பது போலவும் ஆனால், மற்றைய கட்சிகள் தான் அதற்கு உடன்படுகின்றார்கள் இல்லை என்பது போலவும் ஒரு தோற்றத்தை தமிழ் அரசுக் கட்சியினர் ஏற்படுத்தி விட்டார்கள்தானே என்றார் அந்த நண்பர்.

அப்படியொரு தோற்றத்தை அவர்கள் ஏற்படுத்திவிட்டார்களா என்பது தெரியவில்லை. அவர்கள் உண்மையிலேயே ஒற்றுமையை விரும்பியிருந்தால் ஒற்றுமைக்கான அறிவிப்பை விடுத்தபோதே, வாருங்கள் மீண்டும் தமிழ் அரசுக் கட்சியின் தலைமையில் அதன் சின்னத்தில் போட்டியிடுவோம் என்று அழைப்பு விடுத்ததிலிருந்தே அவர்கள் எதற்காக அப்படியோர் அழைப்பை விடுத்தார்கள் என்பது புரிந்து கொள்ளக்கூடியதுதானே. அவர்கள் இப்போதும் தமிழ் மக்கள் பற்றிய தமது கண்ணோட்டத்தை மாற்றிக்கொள்ளவில்லை என்பதைத்தானே அது புலப்படுத்தியது என்று நண்பரிடம் கேட்கவேண்டியிருந்தது.

"தமிழ் மக்கள் மரத்தை வேட்பாளராக நிறுத்தினாலும் வீட்டுக்குத்தான் போடுவார்கள்" என்று பேச்சுவாக்கில் சொல்லப்படுவதுண்டு. இது எழுபதுகளிலிருந்து சொல்லப்படுவதுதான். அதனால்தானோ, என்னவோ தமிழ் அரசிலும் பிற்காலத்தில் வேட்பாளர்களின் தகுதி- ஆளுமை பற்றியெல்லாம் கவனத்தில் கொள்ளாமல் வேட்பாளர்கள் களம் இறக்கப்பட்டனர்.

இன்று நிலைமை அப்படியல்ல. வீட்டுக்குத்தான் போடுவார்கள் என்றால், எப்படி புதிய சின்னமான சங்குக்கு போட்டார்கள் என்ற கேள்வி எழுவதை தவிர்க்கமுடியவில்லை. கடந்த பாராளுமன்ற தேர்தலில் தமிழ் அரசின் சின்னத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மூன்று கட்சிகள் போட்டியிட்டபோது கிடைத்த வாக்குகளிலும் பார்க்க அதிக வாக்குகளை யாழ்ப்பாண மாவட்டத்தில் சங்கு பெற்றுக்கொண்டது. அதிலும், அந்தப் பொதுவேட்பாளர் விடயத்தில் ஐக்கியப்பட்டிருந்த தரப்புகள் அனைத்தும் இதயசுத்தியுடன் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தனவா? தமது முழுப்பலத்தையும் பிரயோகித்து கட்சிகள் பிரசாரம் செய்தனவா என்ற கேள்வியும் உண்டு. அப்படியிருந்தபோதிலும் சங்கு கணிசமான வெற்றியைப் பதிவு செய்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சங்கு பெற்ற வாக்குகள் மீண்டும் பாராளுமன்ற தேர்தலில் சிந்தாமல் சிதறாமல் கிடைக்குமானால், மாவட்டத்தில் அதிக வாக்குகளைப் பெற்ற கட்சியாக அதுவே இருக்கும். அப்படியொரு நிலை வந்துவிடக்கூடாது என்பதும் தமிழ் அரசுக் கட்சியின் விருப்பமாக இருக்கும் என்பதும் எதிர்பார்க்கக்கூடியதுதான்.

இப்போது அதுவல்ல நாம் சொல்லவருவது,

வடக்கு மாகாணத்தில்கூட தமிழ்க் கட்சிகள் பிரிந்து நின்றால், என்ன நடக்கும் என்பது சரியாக கணிப்பிடமுடியாத நிலை இன்று. வடக்கில் - யாழ்ப்பாணத்தில் என்றால், எப்படிப் பிரிந்து நின்றாலும் வெற்றி பெறப்போகின்றவர்கள் தமிழ் எம். பிக்கள்தான். ஆனால், வன்னியில் இப்படி பிரிந்து நின்றால் என்ன நடக்கும் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

ஆனால், கிழக்கில் நிலைமை அதைவிட மோசமானது.

திருகோணமலையில் இரண்டு எம். பிக்களை கொண்டிருந்தநிலை போய் இன்று ஒருவரைக்கூட தக்க வைக்க முடியுமா என்ற நிலை. சம்பந்தர் உயிருடன் இருக்கும்வரை அந்த மனிதருக்காக தமிழர்கள் ஒற்றுமையாக வாக்களித்ததால் அவர் எம். பியாக முடிந்தது. ஆனால், இன்று நிலைமை அப்படியல்ல. தமிழ் அரசு நிறுத்துகின்ற வேட்பாளர்களுக்கு ஈடாக மற்றைய தமிழ்க் கட்சிகளிலும் வேட்பாளர்கள் நிறுத்தப்படலாம் என்பதால் வாக்குகள் இரண்டு, மூன்றாக பிரிந்து எவரும் தெரிவாக முடியாத நிலையே ஏற்படும்.

அம்பாறையில் ஏற்கனவே பிரதிநிதித்துவத்தை கடந்த தேர்தலிலேயே இழந்தாகி விட்டது.

இந்தத் தடவை, அம்பாறையிலும் திருகோணமலையிலும் தமிழர் தரப்பில் ஒற்றுமை ஏற்படவில்லை என்றால், இரண்டு மாவட்டங்களிலும் தமிழர்கள் தமது பிரதிநிதித்துவத்தை முற்றாக இழக்கவேண்டிவரும்.

ஏற்கனவே அந்த மாவட்டங்களிலிருந்து சமூக செயல்பாட்டாளர்களும் புத்திஜீவிகளும் ஒற்றுமையை வலியுறுத்தி கோரிக்கை விடுக்கத் தொடங்கிவிட்டனர். இதற்கு பின்னரும் கட்சிகளும் குழுக்களும் தத்தமது தனிப்பிட்ட நலன்களையே முன்னிறுத்துவார்களானால் அது அவர்களுக்கு அவர்களே குழிவெட்டுவதாக மாறிவிடும்.

- ஊர்க்குருவி.

## மாற்றுத்திறனாளிகள் தினத்தை ஒட்டி கட்டுரை, சிறுகதை, கவிதை போட்டி!

யாழ்ப்பாணம், ஒக். 04

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு கட்டுரை, சிறுகதை, கவிதை, சித்திர போட்டிகளை கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம் நடத்தவுள்ளது.

போட்டிகள் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என இரு பிரிவுகளின் கீழ் நடத்தப்படும், ஆக்கங்கள் அவர்களின் சொந்த ஆக்கங்களாகவும் குறித்த இப் போட்டிக்காக எழுதப்பட்ட அல்லது வரையப்பட்ட புதிய ஆக்கங்களாகவும் ஊடகங்களில் வெளிவராத ஆக்கங்களாகவும் இருத்தல் வேண்டும்.

"மாற்றுத்திறனாளிகள் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்துவதன் ஊடாக மாற்றுத்திறனாளிகளின் வாழ்வை ஆரோக்கியப்படுத்துதல்." எனும் கருப் பொருளில் ஆக்கங்களை அமைத்தல் வேண்டும், ஒருவர் ஓர் ஆக்கத்தை மட்டுமே அனுப்ப முடியும், ஆக்கங்களை ஏ4 தாளில் கணனியில் தட்டச்சு செய்தோ அல்லது தெளிவான கையெழுத்தாகவோ அனுப்பலாம்.

போட்டியாளர்கள் ஆக்கத்துடன் தங்களது முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பிறந்த ஆண்டு மாதம் திகதி என்பனவற்றையும் பாடசாலை மாணவர்களாயின் மேலதிகமாக பாடசாலையின் பெயர், தரம் என்பனவற்றையும் உள்ளடக்கிய சுய விபர படிவத்தையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

ஆக்கங்களை "கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம், இல:290, பருத்தித்துறை வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி, யாழ்ப்பாணம்.", என்ற முகவரிக்கு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

கட்டுரை, சிறுகதை போட்டிகளில் பங்கேற்போர் பாடசாலை மாணவர்களாயின் 300-350 சொற்கள் கொண்டதாகவும் பொதுமக்களாயின் 450 - 500 சொற்கள் கொண்டதாகவும் அமைத்தல் வேண்டும்.

கவிதைப்போட்டியில் பங்கேற்போர் பாடசாலை மாணவர்களாயின் 30 வரிகளைக் கொண்டதாகவும் பொதுமக்களாயின் 40 வரிகளைக் கொண்டதாகவும் கவிதையை அமைத்தல் வேண்டும்.

சித்திரப்போட்டியில் பங்கேற்போர் தமது சித்திரத்தை ஏ4 தாளில் வரைதல் வேண்டும்.

ஒவ்வொரு போட்டியிலும் 03 வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு பரிசில்கள், பதக்கங்கள், சான்றிதழ்கள் என்பன வழங்கப்படும், வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம் நடத்தும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வின் போது வழங்கி வைக்கப்படும்.

மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் 021 205 4224, 076 551 5755, 071 710 0371 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நெடுந்தீவு றோ. க. ம. கல்லூரியில் சிறுவர் தினக் கொண்டாட்டம்!



யாழ்ப்பாணம், ஒக். 04

நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரியில் சிறுவர் தின நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கல்லூரி அதிபர் தலைமையில் பிள்ளைகளைப் பாதுகாப்போம் - சமமாக மதிப்போம் எனும் தொனிப்பொருளில் நிகழ்வு இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

கல்லூரிக்கு அருகில் உள்ள பிரதான வீதியூடாக சிறுவர் உரிமைகள் தொடர்பில், பொதுமக்களுக்கு தெளிவூட்டும் வகையில் விழிப்புணர்வு ஊர்வலமும் நடைபெற்றது.

மாணவர்கள் பலூன்களை ஏந்தியவாறும் சிறுவர் உரிமைகள் தொடர்பான கோஷங்களை எழுப்பியவாறும் இந்த ஊர்வலத்தில் பங்கெடுத்தனர்.

விழிப்புணர்வு ஊர்வலம் பாடசாலையை வந்தடைந்ததும், சமூகப் பெரியார்கள் மதிப்பளிக்கப்பட்டு, அவர்களிடம் மாணவர்கள் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொண்டனர். (ஐ-02)

## 'தர்மமுழக்கம்' துடுப்பாட்ட போட்டி!

கிளிநொச்சி, ஒக். 04

கிளிநொச்சி தருமபுரம் மத்திய கல்லூரி, முழங்காவில் மகா வித்தியாலய அணிகள் மோதும் 'தர்மமுழக்கம்' பெருந்துடுப்பாட்டப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

தருமபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் தருமபுரம் மத்திய கல்லூரி அதிபர் திருமதி இ. கந்தசாமி தலைமையில் நடைபெறும், இந்த நிகழ்வில் முதல்நாளில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்வி பிரதி பணிப்பாளர் (உடற்கல்வி) செல்வி கி. பிரதீபா, சிறப்பு விருந்தினர்களாக த. மிதிலன், செ. செல்வரஜீபன், ந. சிவகுலராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாளில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அதிபர் ச. பூலோகராஜா, சிறப்பு விருந்தினர்களாக புங்குடுதீவு மத்திய கல்லூரி அதிபர் கி. வினோதன், தருமபுரம் மத்திய கல்லூரி முன்னாள் உதவி ஆசிரியர் ம. சசிகுமார், கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்ட சங்கம் [illegible] ஆகியோர் பங்கேற்பர். (ஐ)

## பருத்தித்துறையில் காந்தி ஜெயந்தி தினம்!



வடமராட்சி, ஒக். 04

பருத்தித்துறை பொதுச் சந்தையிலுள்ள காந்தியின் சிலை அருகே காந்தி ஜெயந்தி தினம் கொண்டாடப்பட்டது.

நேற்று முன்தினம் புதன்கிழமை அற வழி போராட்டக் குழுவின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வே. ஜி. தங்கவேல் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, காந்தியின் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஐ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
04.10.2024 வெள்ளிகிழமை
பிலவ வருடம், புரட்டாதி 18

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் தேசிய கட்சிகளின் முடிவு என்ன?

திருகோணமலை மற்றும் அப்பாறை ஆகிய மாவட்டங்களில் தமிழ்ப் பிரதிநிதித்துவங்களை பாதுகாத் தல் என்பது முக்கியமானது. இரண்டு மாவட்டங்களிலும் கட்சிகள் ஒன்றிணைந்து செயல்படாதுவிட்டால் பிரதிநிதித்துவங்களை நிச்சயமாக இழக்க நேரிடும். இதனைப் புரிந்துகொண்டு கட்சிகள் செயல்படுமா?

ஒற்றுமை என்பது தமிழ்த் தேசிய அரசியலைப் பொறுத்தவரையில் எப்போதுமே மாயமான் போன்றதுதான். பலர் பலவாறான முயற்சிகளை மேற்கொண்டும் அது சாத்தியப்படவில்லை. ஆனால், சில நிர்ப்பந்தங்களுக்கு கட்சிகள் கட்டுப்பட வேண்டியவைகளாக இருக்கின்றன. அவ்வாறானதொரு நிர்ப்பந்தம் தற்போது ஏற்பட்டிருக்கின்றது. அந்த வகையில், திருகோணமலை மற்றும் அப்பாறையின் மக்கள் நலன்களை கருத்தில்கொண்டு காலத் தேவையான முடிவு ஒன்றை எடுக்க வேண்டியது கட்டாயமானது.

இதில், இரண்டு தரப்புகளும் விட்டுக்கொடுப்புகளை செய்ய வேண்டும். தமிழ் அரசுக் கட்சி ஒப்பீட்டு அடிப்படையில் வடக்கு, கிழக்கில் அதிக வாக்கு வங்கியைக் கொண்டிருக்கும் கட்சி என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இரண்டு தரப்புகள் மேற்படி மாவட்டங்களில் போட்டியிடுமாக இருந்தால் ஆசனம் பறிபோகவே அதிக வாய்ப்பு உண்டு.

இதனை எவ்வாறு முன்னெடுக்க முடியும்? திருகோணமலை மற்றும் அம்பாறையில் ஓரிடத்தில் வீட்டு சின்னத்திலும் பிறிதோர் இடத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சின்னத்திலும் போட்டியிட முடியும். அவ்வாறில்லாது போனால், இரண்டு மாவட்டங்களிலும் பொதுச் சின்னத்தில் போட்டியிடலாம். மக்களின் நலனை கருத்தில் கொண்டு இவ்வாறான முடிவை எடுக்க வேண்டிய கட்டாயம் உண்டு. ஏட்டிக்குப் போட்டியாக மோதினால் இறுதியில் பிரதிநிதித்துவமே இல்லாமல் போகும்.

இந்த விடயங்களைக் கருத்தில்கொண்டுதான் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் செயல்பட வேண்டும். மக்களின் நலனை விடவும் கட்சியின் நலன் எப்போதுமே மேலானதாக இருக்க முடியாது. இது தொடர்பில் குறிப்பிட்ட மாவட்டங்களை சேர்ந்த சிவில் சமூகக் குழுக்கள் அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும். மக்களிடமிருந்து அழுத்தங்கள் வெளிவர வேண்டும்.

# வரி செலுத்தாத மது நிறுவனங்களுக்கு இம்முறை அனுமதிப்பத்திரம் இல்லை!

கொழும்பு, ஒக். 04

2023/2024 ஆம் ஆண்டுக்கான வரி நிலுவையை இந்த வருடம் நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பதாக செலுத்தாத மதுபான உற்பத்தியாளர்களுக்கு அடுத்த வருடத்துக்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குவதில்லை என கலால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

ரூ. 1,800 கோடி இவ்வாறு வரி நிலுவையாக அறவிடப்பட வேண்டியுள்ளதாகவும் அந்த வரி நிலுவையை செலுத்தாதவர்களுக்கு அடுத்த வருடத்திற்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படமாட்டாது என்றும் கலால் திணைக்கள ஆணையாளர் நாயகம் எம். ஜே. குணசிறி தெரிவித்தார்.

கலால் வரி திணைக்களமானது அதன் வருமான இலக்கு, அதனை அடைவதற்கான வேலைத் திட்டம், அதில் ஏற்படக்கூடிய தடைகள் மற்றும் அதற்கு தீர்வு காணும் வகையிலான செயற்பாடுகள் ஆகியவை தொடர்பில், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மதுபான உற்பத்தி நிறுவனங்களுடன் கலந்துரையாடல்களை நடத்தி வருவது சம்பிரதாயமாகும்.

இந்த வருடத்திற்காக மேற்கொள்ளப்படும் நான்காவது மீளாய்வு நேற்றுமுன்தினம் இராஜகிரியவிலுள்ள கலால் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் நாடளாவிய ரீதியிலுள்ள மதுபான உற்பத்தி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

திணைக்களத்தின் நடவடிக்கைகளில் எந்த விதத்திலும் அழுத்தம் அல்லது தலையிடலை தற்போதைய அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்பதை உறுதிப்படுத்திய அவர்,அந்த வகையில் முறையாகவும் வினைத்திறனுடனும் நடவடிக்கைகளை மேற்கொள்ள தாம், உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்டார். (அ)

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கொழும்பில் சிக்கினார்!

கொழும்பு, ஒக். 04

கொழும்பு துறைமுக நகர நுழைவாயில் பாகுதியில் வெளிநாட்டுத் தயாரிப்பு சிகரெட்களுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த கைது நடவடிக்கை நேற்று இடம் பெற்றுள்ளது.

பொலிஸார் , குற்றப்புலனாய்வு பிரிவினர் மற்றும் கடற்படையினர் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேக நபரிடமிருந்து 1400 வெளிநாட்டுத்தயாரிப்பு சிகரெட்கள் மீட்கப்பட்டுள்ளன. சந்தேச நபர் 53 வயதுடைய மாதலே பிரதேசத்தை சேர்ந்தவர் என்பது விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. சந்தேக நபர் குறித்த விசாரணைகளை கொழும்பு கரையோர பொலிசார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# யாழ். மாவட்ட பாடசாலைகளின் சாதாரண தர பரீட்சை பெறுபேறு!

யாழ்ப்பாணம், ஒக். 04

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. யாழ். மாவட்டத்தில் சில பாடசாலைகள் பெற்ற பெறுபேறுகள் வருமாறு,

**சென். பற்றிக்ஸ் கல்லூரி**

எஸ், டினுஷன், ரி, கவின், எஸ். ஜாக்சன், ஈ. எஸ். அபினாஸ், பி. மைக்கள் ஜெனுசன், ஆர். என். ஹேமோர்ஸ், என். பிரீந்த், ஜே. எஸ். மீர்ஜயான், ஆர். பிரவீனாஸ் ஆகியோர் 9ஏ பெறுபேறுகளை பெற்றனர்.

ரி. தமிழ்கீரன், எம். ஸ்ரீவ் ரோஜர், ஏ. அருள்வளன், எஸ். கவின்சன் ஆகியோர் 8ஏ, பி, ஏ. எய்டன் செரோன் 8ஏ, சி, எவ். ஆர். பீற்றர்சன் 8ஏ, எஸ், ஆர். ஜதுசாந்த், ஜே. கதிர், ஜே. கே. அமலதாஸ், ஜே. ஜிலோஜன், எஸ். தனுசன் ஆகியோர் 7ஏ, பி, சி, ஏ. அன்பமுதன் 7ஏ, 2எஸ் பெறுபேறை எடுத்தனர்.

ஆர். டில்சாந்த் 6ஏ, 3பி, எம். பானுசன், ஜே. கர்வின் போல், ஈ. எச். பிரவீன்ந், வி. சஜோன் ஆகியோர் 6ஏ, 2பி, சி, கே. கௌதம் 6ஏ, பி, சி, எஸ், வி. அன்பரன் 6ஏ, 2சி, எஸ் பெறுபேற்றை பெற்றனர்.

ஜே. பவநீதன், டி. ஹரிஸ்மன் இருவரும் 5ஏ, 4பி, ரி. தீபக், ஏ. ஆர். சி. கிரிசன் ஆகியோர் 5ஏ, 3பி, சி, எஸ். கஜனன் 5ஏ, 3பி, எஸ், ரி. அன்புத்தமிழ் 5ஏ, 2பி, 2சி, ஏ. டேவிட், பி. உசாந்தன், எம். ஜதுசன் ஆகியோர் 5ஏ, பி, 3சி பெறுபேறுகளை பெற்றனர்.

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**


செந்துகி செல்வானந்தம் 9ஏ, ஆராதனா மனோகரன் 9ஏ, ரிந்துஜா ஞானச்சந்திரன் 9ஏ, லாவன்யா தனபாலசிங்கம் 8ஏ, பி, மோஷிகா தர்மசீலன் 8ஏ, பி, தருக்ஷினி குமணன் 8ஏ, பி, அக்ஷயா ஆனந்தகணேசன் 7ஏ, 2பி, பிரேமிதா பிரேமதாஸ் 7ஏ, 2பி, ஜீவிதா ஜெயக்குமார் 7ஏ, பி, சி, கிருத்திகா தேவராஜா 6ஏ, 2பி, சி, சுவபிரதாரா ரவீவந்திரன் 6ஏ, பி, சி. எஸ், ஹேமப்பிரியா செல்வகுமார் 5ஏ, 3பி, சி, சுலக்ஷி கிருஷ்ணலிங்கம் 5ஏ, 2பி, 2சி, யாழரசி அருள்பிரகாஷ் 5ஏ, பி, 2சி

**உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி**

ஆங்கில மொழி மூலம் தோற்றி ரி. தக்ஷயன் 9ஏ, பி. முகேஷானந்த் 9ஏ, கே. கபிலன் 7ஏ, 2பி.

தமிழ் மொழி மூலம் தோற்றி ஜே. டினோசன் 8ஏ, பி, எஸ். பாவேந்தன் 7ஏ, 2பி, ரி. சுவர்ணன் 7ஏ, 2பி, எஸ். கிருஷிகன் 7ஏ, 2பி, பிரியந்தன் 6ஏ, 2பி, சி. (ஜ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. அமைதியான நாள்.

**இடபம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் சூட்சுமங்களை தாண்டி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்து கொள்வீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**கடகம்**
திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். குடும்பத்தாருடன் இணக்கமாக செல்லவும். வியாபாரத்தில் திட்டங்களை தீட்டுவீர்கள். தலைமைக்கு நெருக்கமாவீர்கள். வெற்றி பெறும் நாள்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும்.வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் உயரதிகாரியின் ஆதரவு கிடைக்கும். உற்சாகமான நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமை இருந்துக் கொண்டே இருக்கும். வளைந்து கொடுத்துப் போவது நல்லது. இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டும்.

**துலாம்**
சில காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். போராடி வெல்லும் நாள்.

**விருச்சிகம்**
சின்ன சின்ன சந்தர்ப்பங்களையும், வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். வியாபாரத்தைப் பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். புகழ் ஓங்கும் நாள்.

**தனுசு**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**மகரம்**
இதுவரை இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி ஆதரிப்பார். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**மீனம்**
பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். நன்மை கிட்டும் நாள்.

# பா. ஜ. கவை கண்டித்து காங்கிரஸ் நடைபயணம்

சென்னை, ஒக். 04

ராகுல் காந்திக்கு எதிராக வெறுப்பு அரசியல், பொய்ப் பிரசாரம் செய்யும் ஆர். எஸ். எஸ்., பா. ஜ. கவைக் கண்டித்து, காங்கிரஸ் சார்பில் சென்னையில் தேசிய விழிப்புணர்வு நடைபயணம் நடைபெற்றது.

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தலைமையில் சென்னை அண்ணாசாலையிலுள்ள காமராஜர் சிலையடியிலிருந்து எழும்பூர் அருங்காட்சியகத்தில் அமைந்துள்ள மகாத்மா காந்தி சிலை வரை இந்த நடைபயணம் நடைபெற்றது. (எ)



# “உதயநிதியை துணை முதல்வராக முதல்வர் நியமித்ததில் தவறில்லை”

வேலூர், ஒக். 04

“தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் தனக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி உதயநிதியை துணை முதல்வராக்கியதில் எந்தத் தவறும் இல்லை” என்று இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் ஆர். முத்தரசன் தெரிவித்தார்.

வேலூரில் செய்தியாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

“கடவுள் மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கையை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு அரசியல் ஆதாயம் தேடுபவர்களுக்கு மக்கள் இரையாகக்கூடாது. நிர்மலா சீதாராமன் தனது நிதியமைச்சர் பதவியைப் பயன்படுத்தி தொழிலதிபர்களை மிரட்டி தேர்தல் பத்திரம் மூலம் பா. ஜ. கவுக்கு நிதி திரட்டியமை தொடர்பில் நீதிமன்ற உத்தரவின்பேரில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் ஜே. பி. நட்டாவுக்கும் தொடர்புள்ளது. நேர்மையான அரசியல்வாதிகள் என்றால் நிர்மலா சீதாராமன், ஜே. பி. நட்டா இருவரும் பதவியை இராஜிநாமா செய்துவிட்டு வழக்கை எதிர்கொள்ள வேண்டும்”- என்றார். (எ)

# மதுக்கடைகளை மூடினால் மீண்டும் தி. மு. க. ஆட்சி

## வி. சி. க. தலைவர் திருமாவளவன் சொல்கிறார்



உளுந்தூர்பேட்டை, ஒக். 04

“2026 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னர் மதுக்கடைகளை மூடினால் மீண்டும் தி. மு. க. ஆட்சிக்கு வரும். அதற்கு முன் சட்டமன்றத்தில் தேசிய மதுவிலக்கை அமுல்படுத்த தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்” என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்தார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் மது மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு மகளிர் மாநாடு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணை அமைப்பான மகளிர் விடுதலை இயக்கம் சார்பில் புதன்கிழமை நடைபெற்றது.

இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

“அண்ணா மதுவிலக்கை தளர்த்தவில்லை. மதுக்கடைகளை மூடச்சொல்லி தமிழக அரசுக்கும், மத்திய அரசுக்கும் கோரிக்கை வைக்கிறோம். மதுவிலக்கை நடைமுறைப்படுத்தும் மாநிலங்களுக்கான இழப்பீட்டை மத்திய அரசு தரவேண்டும் என்று கலைஞர் கூறினார். பின்னர் 1974ஆம் ஆண்டு மதுவிலக்கு அமுல்படுத்தப்பட்டது. அதன்பின் மதுவிலக்கை தளர்த்தியது யார்? அரசு மதுக்கடைகளை உருவாக்கியது யார்? தமிழக முதல்வர் ஸ்டாலினா மதுக்கடைகளை திறந்தார். வரும் சட்டமன்ற தேர்தலுக்கு முன் மதுக்கடைகளை மூடினால் மீண்டும் தி. மு. க. ஆட்சிக்கு வரும். அதற்கு முன் சட்டமன்றத்தில் தேசிய மதுவிலக்கை அமுல்படுத்த தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்”- என்றார்.

# “திருமா நடத்தியது மதுப்பிரியர்கள் மாநாடு”

மதுரை, ஒக். 04

திருமாவளவன் நடத்தியது மது ஒழிப்பு மாநாடு அல்ல. மதுப்பிரியர்களின் மாநாடு என்று பா. ஜ. க. ஒருங்கிணைப்புக்குழு தலைவர் எச். ராஜா குற்றஞ்சாட்டினார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தவை வருமாறு,

வி. சி. க. நடத்துவது மது ஒழிப்பு மாநாடா? மதுப்பிரியர்கள் மாநாடா? உண்மையிலேயே அது மது ஒழிப்பு மாநாடாக இருந்தால் அரசு மதுக்கடைகளை திறந்த தி. மு. கவினரை அழைத்தது எப்படி? மக்களை திசை திருப்ப மத்திய அரசுக்கு எதிராக மடை மாற்றுவதற்கான கூட்டுச் சதி தான் இந்த மாநாடு. பட்டியல் சமுதாயத்தினருக்கு கூட திருமாவளவன் தலைவர் அல்ல. அருந்ததியர் உள் ஒதுக்கீட்டை ஏற்க மனது இல்லாதவர். அவர் கூட்டணி கட்சிகளின் மாநாட்டை நடத்தியுள்ளார்.

தி. மு. கவில் கருணாநிதி குடும்பத்தில் பிறக்கவில்லை என்றால் தலைமையில் இடமில்லை என்ற செய்தியை உதயநிதியை துணை முதல்வராக அறிவித்து துரைமுருகன், நேரு போன்ற 50 முதல் 60 ஆண்டுகளாக கட்சியில் இருக்கும் தலைவர்களுக்கு தெரிவித்துள்ளனர். தமிழக அமைச்சரவை மாற்றத்துக்கு பல காரணங்கள் இருக்கும். அதற்கும் பா. ஜ. கவுக்கும் தொடர்பு இல்லை”- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் காரணமாக நிறுத்தப்பட்ட உர மானியத்தை வழங்கவேண்டும்

## தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் மஹிந்த அமரவீர கோரிக்கை!

கொழும்பு, ஒக். 04

**தேர்தல் காரணமாக நிறுத்தப்பட்ட உர மானியத்தை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் முன்னாள் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர கோரிக்கை விடுத்துள்ளார்.**



மகிந்த அமரவீர தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் இது தொடர்பாக கடிதமொன்றை கையளித்துள்ளார்.

இதனையடுத்து கருத்து வெளியிட்ட அவர்-

உர மானியத்தை மக்களுக்கு வழங்கியமைக்காக தற்போதைய ஜனாதிபதிக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வதாகவும் ஆனால், விவசாயிகளுக்கு முப்பதாயிரம் ரூபாய் மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

தேர்தல்கள் ஆணைக்குழு இந்த உர மானியம் வழங்குவதை இடை நிறுத்தியமையால் விவசாயிகளுக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டுக்கு புரதச் சத்து வழங்கும் மீனவர்களுக்கும் எரிபொருள் மானியம் வழங்கப்பட வேண்டும் என்றும் முன்னாள் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

(அ)

# லக்ஷ்மன் கிரியெல்லவுக்கு மகளால் நெருக்கடி நிலை!

கொழும்பு, ஒக். 04

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் கோரிக்கைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்நிலையிலேயே தேசியப் பட்டியலில் இருந்து அல்லாமல் போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்றத்துக்கு வருமாறு கட்சித் தலைமை பலருக்கு அறிவித்துள்ளது.

இந்த நிலையில் அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் தேசியப்பட்டியலில் இருந்து பாராளுமன்றத்துக்கு வரலாம் என்று எதிர்பார்த்த லக்ஷ்மன் கிரியெல்லவும் குறித்த நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்குக் காரணம், இந்த ஆண்டு நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் அவரது மகளும் போட்டியிடும் நம்பிக்கையில் இருப்பதுதான்.

லக்ஷ்மன் கிரியெல்ல தேசியப் பட்டியலிலிருந்து பாராளுமன்றத்துக்கு பரிந்துரைக்கப்பட்ட பின்னர் கண்டி மாவட்டத்தில் போட்டியிடுவதே அவரது அசல் திட்டம் எனக் கூறப்படுகின்றது.

ஆனால் அண்மைய நிலவரத்தின் அடிப்படையில் தாம் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட விரும்புவதாக லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்திருந்த நிலையில் தேசியப்பட்டியல் கிடைக்காவிடின் அரசியலில் இருந்து ஓய்வு பெறவேண்டிய நிலை அவருக்கு ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

# இலங்கை-இஸ்ரேல் இடையே விமான சேவைகள் இரத்து!

கொழும்பு, ஒக். 04

இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான அனைத்து விமான சேவைகளும் எதிர்வரும் 7ஆம் திகதி வரை இரத்து செய்யப்பட்டுள்ளதாக இலங்கைக்கான இஸ்ரேல் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்தார்.

ஈரான் தாக்குதல்களால் டெல் அவிவ் விமான நிலையத்தின் செயல்பாடுகள் நிறுத்தப்பட்டதே இதற்குக் காரணம் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முந்திய நாட்களில் இரு நாடுகளுக்கும் இடையில் விமான சேவைகளை திட்டமிட்டுள்ளவர்கள் உரிய திகதிகளை மாற்றியமைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இஸ்ரேலில் தங்கியுள்ள அனைத்து இலங்கையர்களும் தற்போதும் பாதுகாப்பாக இருப்பதாகவும், எதிர்காலத்தில் ஏதேனும் அபாயகரமான சூழ்நிலை ஏற்படின் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சில அமைச்சுகளின் கடமைகளை பொறுப்பெற்றார் ஜனாதிபதி அநுர!

கொழும்பு, ஒக். 04

விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சராக ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க நேற்று காலை கடமைகளைப் பொறுப்பெற்றார்.

கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் அமைச்சின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

வினைத்திறன்மிக்க மக்கள் நல அரச சேவையை உருவாக்க அர்ப்பணிக்கும் அரச ஊழியர்களுக்காக பக்கபலமாக இருப்போம் என ஜனாதிபதி இதன் போது தெரிவித்துள்ளார்.

குடிமக்களுக்காக பாடுபடும் அரச அதிகாரிகள் அரசியல் பழிவாங்கல்களுக்கு முகம் கொடுக்கும் நிலை இதுவரை காலமும் இருந்தபோதும் அந்த சம்பிரதாயம் இனிமேலும் நடக்காது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.



இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் புதிய அரசியல் சம்பிரதாயம் மற்றும் பழைய அரசியல் கலாசாரத்திற்கு எதிரான எதிர்ப்பு, பிரஜைகள் எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்னைகள், அரச சேவையின் செயற்பாடு தொடர்பான பிரஜைகளின் அதிருப்தி போன்றன தாக்கம் செலுத்திய தாகவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

பொருளாதார வீழ்ச்சிக்குப் பின்னால் மோசடி மற்றும் ஊழல் இருப்பதாக மக்கள் நம்புவதாகவும், அதனை தடுப்பதற்காகவே இம்முறை மக்கள் ஆணை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அரச கட்டமைப்பு முழுவதும் பரவியுள்ள பாரிய மோசடிகள் மற்றும் ஊழலை தடுத்து நிறுத்துவதற்கு மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை காப்பாற்றுவதாகவும், அரச ஊழியர்கள் தமது பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமெனவும் அரச ஊழியர்களிடம் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

(அ)

# யாழில் வன்முறை கும்பலால் ஆடையகத்துக்கு தீ வைப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 04

நெல்லியடியில் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள ஆடையகமொன்று வன்முறைக் கும்பலினால் நேற்று முன் தினம் இரவு தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

மூன்று பேர் கொண்ட குழு ஆடையகத்தை சேதப்படுத்தி தீ வைத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இதன் காரணமாக பெறுமதியான ஆடைகள் தீயில் எரிந்து நாசமானதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த ஆடையகத்தில் சில வாரங்களுக்கு முன்பும் நுழைந்த வன்முறைக் கும்பல் தீ வைக்க முயன்று தப்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பொதுத் தேர்தலுக்கு கட்டுப்பணம் செலுத்திய 37 சுயேச்சை குழுக்கள்!

கொழும்பு, ஒக். 04

நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இது வரை 37 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ශ්‍රී ලංකා මැතිවරණ කොමිෂන් සභාව
இலங்கை தேர்தல் ஆணைக்குழு
Election Commission of Sri Lanka

செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி முதல் பொதுத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்த முடியும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

அதனடிப்படையில் செப்ரெம்பர் 25 ஆம் திகதி முதல் ஒக்ரோபர் முதலாம் திகதி வரை, கொழும்பு மாவட்டத்தில் 3 சுயேச்சைக் குழுக்களும், களுத்துறை மாவட்டத்தில் 2, காலி மற்றும் மாத்தறை மாவட்டத்தில் தலா 1, அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 2, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 4, வன்னி மாவட்டத்தில் 2 சுயேட்சை குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, மட்டக்களப்பு மாவட்டத்தில் 7, அம்பாறை மாவட்டத்தில் 4, திருகோணமலை மாவட்டத்தில் 3, அநுராதபுரம் மாவட்டத்தில் 2, பதுளை மற்றும் மொனராகலை மாவட்டத்தில் தலா 1, இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டத்தில் தலா 2 சுயேச்சைக் குழுக்களுமாக மொத்தம் 37 குழுக்கள் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

(அ)

# குருநாகலில் போட்டி? மறுக்கின்றார் நாமல்

கொழும்பு, ஒக்.04

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எதிர்வரும் பொதுத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதாக வெளியான தகவலை மறுத்துள்ளார்.

ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ள நாமலின் அலுவலகம், இது ஒரு தவறான பிரசுரம் என்றும், மக்களை தவறாக வழி நடத்துகிறது என்றும் கூறியுள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஒவ்வொரு வேட்பாளர்களும் போட்டியிடும் மாவட்டங்களை பொதுஜன பெரமுன இன்னும் தீர்மானிக்கவில்லை எனவும், இது தொடர்பில் இறுதி இணக்கப்பாட்டுக்கு வரவில்லை எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் நாமல் ராஜபக்ஷ எதிர்வரும் பொதுத் தேர்தலில் குருநாகலில் போட்டியிடுவார் என கூறுவது மக்களை தவறாக வழிநடத்துவதாகவும், அரசியல் இலாபம் தேடுபவர்களால் இவ்வாறு செயற்படுவதாகவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருப்பு வாக்கு குறித்து போதிய தெளிவில்லை

## ஜனாதிபதி தேர்தல் குறித்து பொதுநலவாய அமைப்பு

கொழும்பு, ஒக். 04

**இலங்கையில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் அமைதியான ஒன்றாக இருந்தாலும், விருப்பு வாக்கு தொடர்பான வாக்காளர் மற்றும் தேர்தல் அதிகாரிகளுக்குப் போதிய அறிவு இருக்கவில்லை என்பது கரிசனைக்குரியது எனப் பொதுநலவாய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.**

இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணித்த சர்வதேச அமைப்புகளில் பொதுநலவாய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பு அமைப்பும் ஒன்றாகும்.

பொதுநலவாய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு இலங்கையில் நடைபெற்று முடிந்த தேர்தல் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், விருப்புவாக்கு தொடர்பான தெளிவு குறித்து கரிசனைத் தெரிவித்துள்ளது.

வாக்காளர்களின் விருப்பத்துக்கு அமைவாகத் தேர்தல் வேட்பாளர்களை வரிசைப்படுத்துவதற்கு விருப்பு வாக்கு முறைமை வழி செய்கிறது.

இலங்கையில் வாக்குச் சீட்டில் 3 வேட்பாளர்களை, வாக்காளர் தமது விருப்பத்தின் ஒழுங்கில் குறித்து வாக்களிக்க முடியும்.

இந்தவிடயத்தில் வாக்காளர்களுக்கும் தேர்தல் அதிகாரிகளுக்கும் போதிய அறிவைப் புகட்டும் வகையிலான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று பொதுநலவாய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு பரிந்துரைத்துள்ளது.

அதேநேரம் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் பேணப்பட்ட அமைதி, அடுத்தடுத்தத் தேர்தல்களிலும் பேணப்படும் என்று எதிர்பார்ப்பதாகவும் அதன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# இதுவரை ஒப்படைக்கப்படாத சம்பந்தனின் கொழும்பு இல்லம்

கொழும்பு, ஒக். 04

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவருமான ஆர்.சம்பந்தனுக்கு வழங்கப்பட்ட கொழும்பு 7 இல் உள்ள இல்லம் சம்பந்தன் இறந்து சுமார் மூன்று மாதங்கள் கடந்துள்ளபோதிலும் இதுவரை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

2015ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவராக பதவியேற்றதன் பின்னர் சம்பந்தனுக்கு இந்த உத்தியோகபூர்வ இல்லம் கிடைத்ததுடன் பின்னர் 2018 ஒக்ரோபர் 26 ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவிக்கு வந்தபோது அங்கு தொடர்ந்து வசிப்பதற்கு வழங்கப்பட்டது.

இந்த வாசஸ்தலத்தை மீண்டும் அரசாங்கம் பெற்றுக்கொள்வதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை முன்னாள் அமைச்சர் தினேஸ் குணவர்தனவிடம் அமைச்சு அண்மையில் கையளித்தபோதிலும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதையடுத்து இந்த தீர்மானம் நிறுத்தப்பட்டது.

இதையடுத்து, பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் இதற்கான பத்திரத்தை கையளிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, 2017 ஆம் ஆண்டு இந்த வீட்டின் பழுது பார்க்கும் பணிக்காக மூன்று கோடியே ஐம்பது லட்சம் ரூபாய் செலவிடப்பட்டதுடன் இல்லத்தின் நீர்க் கட்டணம், மின்சாரக் கட்டணம், தொலைபேசி கட்டணம், பராமரிப்புச் செலவுகள் என்பன அரசாங்கத்தினால் ஏற்கப்படுவதாகவும், இந்த உத்தியோகபூர்வ இல்லத்தின் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளும் ஊழியர்களின் சம்பளம் அரசாங்கத்தினால் செலுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் உணவகங்களில் திடீர் சோதனை

முல்லைத்தீவு, ஒக். 04

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட புதுக்குடியிருப்பு நகர் பகுதியில், உணவகங்களில் நேற்று முன்தினம் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினர், சுகாதார பரிசோதகர்கள் இணைந்து, திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போது, சில உணவகங்களில் காலாவதியான பொருட்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டு, அந்த உணவகங்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், இரண்டு உணவகங்களை மூடி, சிறு சிறு வேலைகளை மேற்கொண்ட பின்னர், கடைகளை திறக்க முடியும் என உணவக உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்தப் பரிசோதனை நடவடிக்கையில், புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பி. சத்தியரூபன் தலைமையில், சுகாதார பரிசோதகர்கள் இணைந்து கொண்டனர்.

(அ)

# மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டு சங்கானையில் நேற்று கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 04

சங்கானை பஸ் நிலையத்துக்கு முன்பாக மதுவுக்கு எதிரான கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று நடைபெற்றது.

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினரின் ஏற்பாட்டில் இந்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மதுவுக்கு எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டதுடன் மதுவுக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர். சங்கனையில் புதிதாக மதுபானச்சாலை அமைப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் இதற்கு அனுமதி வழங்க வேண்டாம் எனவும் போராட்டத்தின் போது வலியுறுத்தப்பட்டது.

போராட்டத்தின் முடிவில் சங்கானை பிரதேச செயலாளர் கவிதா உதயகுமாரிடம் ஜனாதிபதிககான மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதில் வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினர், சங்கானை பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினர், வலிகாமம் மேற்கு முச்சக்கர வண்டி சங்கத்தினர், இளைஞர்கள், யுவதிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

(அ)

# மார்பகப் புற்றுநோய் தொடர்பில் பருத்தித்துறையில் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஒக். 04

பருத்தித்துறையில் மார்பகப் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு பேரணியும் கருத்தரங்கும் நடைபெற்றது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை முன்பாக இருந்து பருத்தித்துறை பிரதேச செயலகம் வரை பேரணி முன்னெடுக்கப்பட்டு அங்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது. பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிந்திகா செந்தூரன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. இதன்பொது புற்றுநோய் தொடர்பான விழப்புணர்வுக் கருத்துரைகளை, புற்றுநோய் விசேட வைத்திய நிபுணர் தனேந்திரன் நிகழ்த்தினார். இதில் யாழ்ப்பாணம் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி செந்தூரன், பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் ஆகியோரும் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர்,

இந்நிகழ்வில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், தாதியர்கள், மருத்துவ ஊழியர்கள், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மருத்துவர்கள், தாதியர்கள், மற்றும் உத்தியோகஸ்தர்கள், மாதர் சங்க உறுப்பினர்கள உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

(அ-2)

# 5 வயது முதல் 12 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளில் பல் நோய் அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 04

05 வயது முதல் 12 வயதுக்குட்பட்ட பிள்ளைகளின் பல் நோய்கள் அதிகரித்து வருவதாக சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

முன்பள்ளி வயது முதல் சிறுவர்களின் வாய் ஆரோக்கியம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமென பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சமூகப் பல் மருத்துவப் பிரிவின் பேராசிரியர் திலிப் டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டபோதே பேராசிரியர் திலிப் டி சில்வா இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் 10 வருடங்களுக்கு ஒருமுறை வாய்வழி ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நாட்களில் 2024-2025 ஆண்டுக்கான ஆய்வுகள் இடம்பெறுகின்றன

இதன் ஊடாக 5 வயது குழந்தைகளுக்கு 63மூ வாய் நோய்கள் இருப்பதைக் காண்டறிய முடிந்துள்ளது.

அதாவது 100 குழந்தைகளை எடுத்துக் கொண்டால் 63 பேருக்கு பற்களில் துவாரம் உள்ளது.

10 குழந்தைகளை எடுத்தால் 6 பேருக்கு உண்டு. 12 வயதிற்குள், இது கணிசமாகக் குறைந்துள்ளது.

இந்த 63% வீதத்தை பாடசாலை வருவதற்கு முன்பே 55மூ வரை கொண்டு வர முடிந்தால் அது பெரிய விடயம். இதனை எளிமையாக செய்யலாம்.

ஒரு நாளைக்கு இரண்டு முறை, குளோரைட் இல்லாத பற்பசை மூலம் பல் துலக்கவும்.

சரியான துலக்குதல் நுட்பத்தை கற்றுக்கொடுங்கள் மற்றும் இனிப்பு உணவுகளை குறைக்கவும். முடிந்தவரை இனிப்புக்களை பிரதான உணவின் போது மாத்திரம் மட்டுப்படுத்தினால் அது எளிதானது- என்றார்.

(அ)

# அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக். 04

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஆகியோருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் 29ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஷங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

இதன்போது குற்றம்சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்

இதேவேளை, முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஜயம்பதி ஹீன்கெந்த ஆகியோருக்கு எதிராக 2000 கோடி ரூபாவை செலுத்தி அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதலின் பின்புலம் அறிந்தால் பல அரசியல்வாதிகள் சிறைக்கு செல்வர்

## அருட்தந்தை சிறில் காமினி சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஒக். 04**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்புலத்தை கண்டறிந்து குற்றவாளிகளைக் கைது செய்வதென்பது பெரிய விடயமல்ல. அதனை செய்வதற்கான ஆர்வம் இல்லாமையே இங்குள்ள பிரச்னையாகும். தாக்குதலின் பின்புலத்தைத் தேடிக் கண்டு பிடித்தால் நாட்டில் உள்ள பல அரசியல்வாதிகள் சிறையில் இருக்க வேண்டி ஏற்படும்.இதன் காரணமாகவே இந்த தாக்குதல் தொடர்பான உண்மைகள் மூடி மறைக்கப்பட்டுள்ளதாகக் கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு மறைமாவட்டத்தின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி அடிகளார் தெரிவித்தார்.**

எனவே இந்த நாட்டை தூய்மைப்படுத்தவேண்டும்.பொதுத் தேர்தலுக்கு முன்னர் அரசியல் கட்சிகள் தூய்மைப்படுத்தப்பட வேண்டும். கட்சிக்குள் அழுக்குகளை வைத்துக் கொண்டு நாட்டை தூய்மைப்படுத்த முடியாது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய எழுதிய உயிர்த்த ஞாயிறு தாக்குதல், வீதி அரச நிழல் மற்றும் தீர்க்கப்படாத மர்மங்கள் எனும் தலைப்பில் எழுதப்பட்ட புலனாய்வு நூல் வெளியீட்டு நிகழ்வின் செயலமர்வொன்று நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை (01) கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் விவகாரம் 5 வருடங்களாக ஏன் இழுத்தடிப்பு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது என சிலர் எம்மிடம் வினவுகின்றார்கள். நாட்டில் ஒரு அசம்பாவிதம் இடம்பெற்றால் அதனை காலப்போக்கில் மறந்து விட வேண்டும் எனும் கலாசாரமே உள்ளது.நாம் அவற்றை இயல்பாகவே மறப்பது கிடையாது.

உண்மையில் அவை மறக்கடிக்கப்படுகிறது.இந்த தாக்குதலின் பின்புலத்தில் உண்மையான குற்றவாளிகளைச் சட்டத்தின் முன்னிறுத்த நாம் நடவடிக்கை எடுத்தால் இந்த மறக்கடிக்கப்படும் கலாசாரத்திலிருந்து எம்மால் விடுபடமுடியும்.

இந்ததாக்குதலின்போது உயிரிழந்த அப்பாவி மக்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டும் என்பதற்காக மாத்திரம் நாம் இந்த போராட்டத்தை முன்னெடுக்கவில்லை.நாட்டில் வளமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் தூரநோக்கு சிந்தனையிலேயே இதனை நாம் செய்கிறோம்.

இந்த தாக்குதலின் பின்னணியில் பாரிய சதித்திட்டம் ஒன்றுள்ளது.டபிள்யூ.டி.லிவேரா முதல் தடவையாக இதனை குறிப்பிட்டிருந்தார். இதனை நாம் நம்புகிறோம். சட்டமா அதிபர் என்ற வகையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான அனைத்து தகவல்களும் அவரிடமே இருந்தன.அரசியல் சதி என்ன என்பது தொடர்பில் அறிந் துகொள்வதே தற்போதுள்ள விடயமாகும். அது தொடர்பில் ஆணைக்குழுக்கள் கண்டறிந்துள்ளன.

எனினும் முன்னாள் சட்டமா அதிபரும் தற்போதுள்ள சட்டமா அதிபர்களும் அதனை செய்வதில்லை. ஏனைய கொலைகள் தொடர்பில் வழக்கு தாக்கல் செய்வது கிடையாது. இந்த இடத்திலேயே நாம் சிக்கியுள்ளோம். சட்டமும் அதே இடத்திலேயே சிக்கியுள்ளது.

இந்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சம்பவத்தை மாத்திரம் இங்கு குறிப்பிடுகிறேன். அப்துல் லத்தீப் ஜமீல் மொஹமட் என்பவர் தாஜ் சமுத்ரா ஹோட்டலில் வெடிகுண்டை வெடிக்கச் செய்யாமல் சென்று விடுகிறார். அவர் அந்த ஹோட்டலில் இருக்கும் போது அவருக்கு தொலைபேசி அழைப்பு கிடைக்கப்பெற்றது.

அதற்கு அவர் பதிலளித்தார். அதனை சி.சி.ரி.வி காட்சிகளில் காண முடியும். அதன் பின்னரே அவர் தாஜ் சமுத்ரா ஹோட்டலில் இருந்து வெளியேறிச் சென்றார். அந்தத் தொலைபேசி அழைப்பை யார் மேற்கொண்டது என்பதை கண்டறிந்திருந்தால் இந்த தாக்குதலின் பின்னணியில் யார் இருந்தார் என்பதை கண்டுபிடிக்க முடியும். இதுவரை அதனை அவர்கள் செய்யவில்லை.

ஜமில் மரணிக்க முன்னர் உயிருடன் இருக்கும்போதே இராணுவ புலனாய்வுப் பிரிவினர் ஜமிலின் வீட்டுக்கு சென்றனர். உண்மையில் அது எவ்வாறு இடம் பெற முடியும். அவர் தொடர்பில் இராணுவ புலனாய்வுப் பிரிவினர் நீண்ட விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

ஜமில் தற்கொலை குண்டு தாக்குதல் மேற்கொள்ளவுள்ளதாக ஏன் புலனாய்வுப் பிரிவினரால் கண்டுபிடிக்க முடியாமல் போனது? உண்மையில் அவர்கள் அதனை அறிந்திருக்கவில்லையா? அல்லது தெரிந்து கொண்டு அதனை அவர்கள் மறைத்துள்ளார்களா? என்ற கேள்வி எமக்குள்ளது. ஜமில் உயிரிழப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கியுள்ளனர் என்பதே எமது நிலைப்பாடாகும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் ஆட்சி காலப்பகுதியில் திரிப்பொலி எனும் இராணுவப் படை இருந்தது.உயிர்த்த ஞாயிறுதாக்குதல் தொடர்பான பல கொலைச்சம்பவங்கள் உள்ளன. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னரும் பல்வேறு கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றன. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்புலத்தில் இருந்தவர்களாலேயே அவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சனல் 4 விடயங்கள் தொடர்பில் ஆராய குழுவொன்றை நியமித்தார். அதன் அறிக்கைகள் ஜனாதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டன.

அதன் பின்னர் அவை சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்டதாக எமக்கு தகவல் கிடைத்தது. ஆனால் அந்த அறிக்கை தற்போது காணாமல் போயுள்ளது. அந்த அறிக்கையில் இந்த சம்பவம் தொடர்பில் பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக எமக்கு தகவல் கிடைத்தன.

இந்த தாக்குதலின் பின்னணியில் உள்ள எமக்கு இருந்த சந்தேகங்களை குறிப்பிட்டு கோட்டாபயவுக்கு நாம் கடிதமொன்றை அனுப்பினோம்.கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கடிதமொன்றை அனுப்பினோம்.

சஹ்ரானுக்கு தொடர்ந்தும் ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டிருந்தார். அவர் தொடர்பில் ஜனாதிபதியின் விசாரணை ஆணைக்குழுவில் வெளிப்படுத்தப்பட்டது. உண்மையில் அதனை ரவி செனவிரத்னவே வெளிப்படுத்தினார். அன்று அவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட பொலிஸ் மா அதிபராக இருந்தார்.இன்று பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக உள்ளார்.

அபுஹிந்த் யார் என்பது தொடர்பில் தாம் தேடி பார்த்ததாக அவர் அன்று சாட்சி வழங்கியிருந்தார்.விசாரணை நீதிபதி ஒருவர் கடதாசி ஒன்றில் பெயர் ஒன்றை எழுதி ரவி செனவிரத்னவுக்கு அனுப்பினார்.ரவி செனவிரத்ன அதனை வாசித்த தன் பின்னர் நீதிபதி அந்த நபரா இவர் என வினவினார்.அதற்கு அவர் ஆம் என கூறினார். இந்த சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளது.

ஆனால் அந்த கடதாசியில் எழுதப்பட்ட அந்த பெயர் அந்த அறிக்கையில் இல்லை. அபுஹிந்த் என்பவரே உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி.அவரை தேடி கண்டு பிடிப்பது பெரிய விடயமல்ல. அதனை தேடுவதற்கான ஆர்வம் இல்லாமையே இங்கு உள்ள பிரச்னையாகும். அதனை தேடி கண்டுபிடித்தால் நாட்டில் உள்ள பல அரசியல்வாதிகள் சிறையில் இருக்க வேண்டி ஏற்படும். இல்லாவிட்டால் வீடு செல்ல வேண்டும். இதன்காரணமாகவே இந்த தாக்குதலின் தொடர்பான உண்மைகள் மூடி மறைக்கப்பட்டுள்ளன.-என்றார்.

# எரிபொருட்களின் விலை இம்முறை எதிர்பார்த்த அளவு குறையவில்லை

## டலஸ் அழகப்பெரும கூறுகிறார்



கொழும்பு, ஒக்.

மக்கள் எதிர்ப்பார்த்ததைப் போல, எரிபொருட்களின் விலைகளை புதிய ஜனாதிபதியினால் குறைக்க முடியவில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலில் முன்னிலைக்கு வந்த தேசிய மக்கள் சக்தியும், ஐக்கிய மக்கள் கூட்டணியும் மிகவும் சிறியக் கட்சிகளாகும்.

இந்த இரண்டு கட்சிகளும் 4 வருடங்களாகத்தான் அரசியலில் ஈடுபடுகின்றன. இந்த சிறியக் கட்சிகள், 60 வருடத்திற்கும் பழைமையான கட்சிகளை ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடித்துள்ளன.

இந்த அரசியல் பாடத்தை அனைவரும் புரிந்துக் கொள்ள வேண்டும்.

நாம் புதிய அரசாங்கத்தின் ஊழல் ஒழிப்பு செயற்பாட்டுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க தயார்.

இன்று எரிபொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளன. ஆனால், மக்கள் எதிர்ப்பார்த்த அளவில் எரிபொருள் விலை குறையவில்லை. இது தொடர்பாக கடந்த காலங்களில் ஒரு லீற்றருக்கு 120 ரூபாய் அளவில், யாருடையதோ பொக்கட்டுக்கு செல்வதாக புதிய ஜனாதிபதி கூறியிருந்தார்.

ஆனால், அவர் கூறியதைப் போன்று விலை குறைப்பு இடம்பெறவில்லை. எனவே, இது தொடர்பாக அவர் சிந்திக்க வேண்டும்-என்றார். (அ)

# தமிழர் சமவுரிமை இயக்கம் வவுனியாவில் கட்டுப்பணம்

வவுனியா, ஒக். 04

பாராளுமன்றத் தேர்தலில் வன்னி தேர்தல் தொகுதியில் சுயாதீனமாக போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை தமிழர் சமவுரிமை இயக்கம் நேற்று வவுனியா தேர்தல்கள் அலுவலகத்தில் செலுத்தியது.

அந்தக் கட்சியின் முதன்மை வேட்பாளர் க.யசோதினியால் குறித்த கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

பணத்தை செலுத்திய பின்னர் ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்து தெரிவித்த முதன்மை வேட்பாளர்-

தமிழர் சமவுரிமை இயக்கத்தில் பெண்கள் ஐம்பது வீதம் உள்வாங்கப்பட்டுள்ளனர். வடக்கு-கிழக்கில் ஒரு மாற்றத்துடன் கூடிய சுமூகமான சூழ்நிலையினை உருவாக்க வேண்டும் என்ற தூய மாற்றத்துடன் தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

வடக்கு கிழக்கு முழுவதும் நாங்கள் போட்டியிடுகின்றோம். எனவே எமக்கான ஆதரவினை தருவீர்கள் ஏன நம்புகின்றேன்-என்றார். (அ)

# கிராம உத்தியோகத்தரை இடமாற்றம் செய்யாதீர்!

யாழ்ப்பாணம், ஒக். 04

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வரணி நாவற்காடு கிராம உத்தியோகத்தரை இடமாற்ற வேண்டாம் எனக்கோரி மக்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

நாவற்காடு - கிராம அலுவலராக, கந்தசாமி தர்மேந்திரா கடமையாற்றி வந்தார்.

நாவற்காடு பிரதேசத்திற்கு, கிராம அலுவலராக நியமிக்கப்பட்டு, 6 மாதங்கள் பூர்த்தியாகாத நிலையில் அவருக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றத்தை இரத்து செய்யக் கோரி, கிராம மக்களின் கோரிக்கை கடிதத்துடன், பிரதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள், சாவகச்சேரி பிரதேச செயலரை சந்தித்திருந்தனர்.

எனினும், மக்களின் கோரிக்கைக்கு, பிரதேச செயலாளரால் உரிய தீர்வு வழங்கப்படாத நிலையில் பிரதேச மக்கள் இணைந்து நேற்று நாவற்காடு பொது மண்டபத்தில் அமைந்துள்ள கிராம அலுவலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(அ)

# எலிக்காய்ச்சல் அபாயம்!

கொழும்பு, ஒக். 04

நாட்டில் எலிக்காய்ச்சல் பரவல் அதிகரித்து வருவதாக சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் 7500 பேர் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

எலிக்காய்ச்சலால் மரணிப்பவர்களின் வீதம், டெங்கு நோயாளர்களின் உயிரிழப்பு வீதத்தை தாண்டியுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் சமிந்த முத்துகுட தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு சிகரெட்களுடன் கல்முனையில் இருவர் கைது



கல்முனை, ஒக். 04

**சட்டவிரோதமாக பெருந்தொகை வெளிநாட்டு சிகரெட்களை ஓட்டோ ஒன்றில் சூட்சுமமான முறையில் கடத்திச் சென்ற இரண்டு சந்தேக நபர்களை கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர்.**

இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் பெரிய நீலாவணை விசேட அதிரடிப் படை முகாமிலிருந்து சென்ற அணியினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் அம்பாறை, கல்முனை பிரதான வீதியில் வைத்து சந்தேகத்துக்கு இடமான முறையில் பயணம் செய்து கொண்டிருந்த ஓட்டோவை இடைமறித்து சோதனை மேற்கொண்டனர்.

இந்த நடவடிக்கையின் போது விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்ட சட்டவிரோத வெளிநாட்டு சிகரெட்கள் கல்முனை பகுதியில் உள்ள காலணிகள் விற்பனை நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டமை கண்டறியப்பட்டது.

கைதான இரு சந்தேக நபர்களின் பயணப் பொதிகளில் இருந்து 20200 சிகரெட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. (எ)

## பாராளுமன்ற தேர்தலில் 25 வீதம்

# பெண்களின் உரிமையை உறுதிப்படுத்த வேண்டும்

மட்டக்களப்பு, ஒக். 04

தமிழ்த் தேசிய கட்சிகளை ஒன்றிணைந்து செயல்பட முன்வருமாறு கோரிக்கை விடுத்துள்ள பெண் சிவில் சமூக செயல்பாட்டாளர்கள், பாராளுமன்றத் தேர்தலில் 25 வீத பெண்களின் உரிமையை உறுதிப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சிவில் சமூகச் செயல்பாட்டாளர் மிரேகா நாகேஷ்வரன் மற்றும் மட்டக்களப்பு சிவில் வலையமைப்பின் உறுப்பினர்களான குணரட்னம் யுனிதா, பிரசாந்தன் பவித்திரா ஆகியோர் இவ்வாறு கருத்துகளை முன்வைத்தனர்.

"வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கடந்த காலத்தில் 22 பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுக்கொண்டோம். ஆனால், ஒற்றுமையின்மை காரணமாக தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அரைவாசிக்கு மேல் குறைந்துள்ளது. ஒற்றுமையின்மையே இந்த நிலைக்கு காரணம்.

பாராளுமன்றத் தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கட்சிகள் பேச்சளவிலேயே பெண்களின் பிரதிநிதித்துவம் குறித்து பேசுகின்றனர். உள ரீதியாக அவர்கள் பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தை வழங்குவதை உறுதிப்படுத்துவதில்லை"- என்றார். (எ)

# கல்முனை நூலகத்தில் சிறுவர் தின நிகழ்வுகள்



கல்முனை, ஒக். 04

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கல்முனை பொது நூலகத்தில் சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றன.

நூலகர் ஏ. எல். எம். முஸ்தாக் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை மாநகர உதவி ஆணையாளர் ஏ. எஸ். எம். அஸீம், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என். பரமேஸ்வர வர்மன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கல்முனை விவேகானந்த வித்தியாலயத்தை சேர்ந்த ஒரு தொகுதி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது மாணவர்கள் நூலகத்தின் அனைத்து பிரிவுகளையும் முழுமையாக பார்வையிட்டதுடன் சிறுவர் தினத்தின் முக்கியத்துவம், நூலகப் பயன்பாடு மற்றும் வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பங்குபற்றிய மாணவர்கள் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. (எ)

# தமிழ்க்கட்சிகள் தனிவழி போனால் ஒரு முடிவை எடுக்க வேண்டிவரும்

## சமூக ஆர்வலர்கள், மக்கள் எச்சரிக்கை

கல்முனை, ஒக். 04

"தமிழ் அரசியல் கட்சிகள், அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் இருப்பு, நலன் பற்றிய சிந்தனையின்றி தனிவழி தீர்மானங்களை எடுத்தால், நிச்சயமாக கல்முனைத் தொகுதி மக்கள் மாத்திரமல்லாமல் இந்த மாவட்ட ஒட்டுமொத்த தமிழ் மக்களும் தமிழ் அரசியல் பரப்பிலிருந்து அகன்று வேறு ஒரு முடிவை இந்தத் தேர்தல் களத்தில் எடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என்பதை அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் பகிரங்கமாக வெளிப்படுத்துகின்றோம்"-

இவ்வாறு அம்பாறை மாவட்ட சமூக ஆர்வலர்களும், பொதுமக்களும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கல்முனை சேனைக்குடியிருப்பு தமிழ்வாணன் மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நடைபெறவிருக்கின்ற பாராளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பிலான மக்கள் சந்திப்பு நடைபெற்றது.

இந்த மக்கள் சந்திப்பு தொடர்பில் பொதுவான ஓர் அழைப்பு - அறிவித்தல் ஏலவே விடுக்கப்பட்டது. அந்த அழைப்பு - அறிவித்தலில் கல்முனை பிராந்தியத்திலும் அம்பாறை மாவட்டத்திலும் இருக்கக்கூடிய தமிழ் மக்கள் நலன் சார்ந்து சிந்திக்கக் கூடியவர்கள் மற்றும் விசேடமாக கல்முனை வடக்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்டு காணப்படுகின்ற பொது அமைப்புகள், ஆலய நிர்வாகங்கள், இளைஞர் கழக நிர்வாகங்கள், விளையாட்டுக் கழக நிர்வாகங்கள், கிராம அபிவிருத்தி சங்க நிர்வாகங்கள் மற்றும் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் உள்ளிட்ட சுமார் 60 பேர் கலந்து கொண்டிருந்தனர்.

பொதுமக்கள் மற்றும் ஏற்பாட்டாளர்கள் தரப்பிலே தமிழ் அரசியல் பரப்பில் இருக்கின்ற அனைத்து கட்சிகளும் ஒரு குடையின் கீழ் ஒன்றுபட்டு இந்த முறை பாராளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட வேண்டும் என்ற கோரிக்கை ஏகமனதாக முன்வைக்கப்பட்டது.

இருப்பினும், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் பதில் கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் திருப்திப்படுகின்ற வகையில் அமைந்திருக்கவில்லை.

அதாவது ஒன்றுபட்டு வருவதற்கான சாத்தியப்பாடுகள் அற்ற கருத்துக்களை தான் அவர்கள் பெரும்பாலும் வெளியிட்டிருந்தனர்.


அதனால் அரசியல் கட்சிகளுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டது.

அதேவேளை, ஒன்றுபட்டு ஒரு சின்னத்தில் போட்டியிட முன்வராத பட்சத்தில் கல்முனைத் தொகுதி பொதுமக்கள் தமிழ் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகளுக்கு அப்பால் சென்று தேர்தலுக்கான ஆதரவை தனிவழியில் வழங்குவது என்ற ஒரு முடிவும் எடுக்கப்பட்டுள்ளது. (எ)









வரலாற்று பிரசித்தி பெற்ற சம்மாந்துறை சிறீபத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த தீமிதிப்பு சடங்கு நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் - ஹிஸ்புல்லாக்கள் லெபனானில் நேரடி மோதல்

## மத்திய கிழக்கில் போர் பதற்றம் தீவிரம்



பெய்ரூட், ஒக். 04

**இஸ்ரேல் இராணுவத்துக்கும் ஹிஸ்புல்லா போராளிகளுக்கும் இடையில் லெபனானில் நேரடி மோதல் இடம்பெற்றது. இஸ்ரேலின் தரைவழித் தாக்குதலால் மத்திய கிழக்கில் போர் பதற்றம் தீவிரமடைந்துள்ளது.**

லெபனான் மீது தரைவழித் தாக்குதலைத் தொடங்குவதாக இஸ்ரேல் அறிவித்த நிலையில், லெபனானின் எல்லைக்குள் இஸ்ரேல் இராணுவமும், ஹிஸ்புல்லா போராளிகளும் நேரடி மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். எல்லையோரத்தில் இரண்டு இடங்களில் மோதல் இடம்பெறுவதாகவும். அதில் ஒரு தாக்குதல் முறியடிக்கப்பட்டதாகவும் ஹிஸ்புல்லா இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

தெற்கு லெபனானில் நடைபெற்றுவரும் இந்த மோதல்கள் 'முதல் சுற்றுப் போரின்' ஒரு பகுதி என்று ஹிஸ்புல்லா இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர். இது குறித்து ஹிஸ்புல்லா செய்தித் தொடர்பாளர் கூறும்போது, "எங்களது படைகளும், போராளிகளும் எதிரிகளை (இஸ்ரேல்) எதிர்கொண்டு தாக்குவதற்கு முழு அளவில் தயாராக உள்ளனர். இஸ்ரேல் இராணுவத்துடன் மோதுவதற்கு எங்களின் போராளிக் குழுக்களிடம் போதுமான ஆயுதங்கள் உள்ளன" என்று தெரிவித்துள்ளார். (எ)

# "குழந்தைகள் சண்டைபோல இஸ்ரேலும் ஈரானும் மோதல்"

வாஷிங்டன், ஒக். 04

இஸ்ரேல், ஈரான் மோதலை, இரண்டு குழந்தைகள் பாடசாலை வளாகத்தில் சண்டையிட்டுக் கொள்வது போல இருப்பதாக அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விமர்சித்துள்ளார்.

குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ட்ரம்ப் பரப்புரை மேற்கொண்டபோது இஸ்ரேல் மீதான ஈரானின் தாக்குதல் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த அவர், "தற்போது இரு நாட்டிலும் நிலைமை மோசமடைந்துள்ளது. ஆனால், இது நடந்துதான் ஆக வேண்டும். செவ்வாய்க்கிழமையன்று இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது. இது போன்ற சம்பவங்கள் நிச்சயமாக நிகழ்ந்திருக்க கூடாது.

பாடசாலை வளாகத்தில் இரண்டு குழந்தைகள் சண்டைபோட்டுக் கொள்வதுபோல இது உள்ளது. சில நேரம், என்னதான் நடக்கிறது என்று பார்ப்பதற்கு நீங்கள் அவர்களை அப்படியே விட்டுவிட வேண்டும். என்ன நடக்கிறது என்று பார்ப்போம். ஆனால், நிச்சயமாக இது ஒரு பயங்கரமான போர் என்பதை மறுக்க முடியாது. எனவே, மத்திய கிழக்கில் அமெரிக்கா தலையிட்டாக வேண்டும்"- என்றார். (எ)

# இஸ்ரேல் பிரதமருக்கு ஈரான் கொலை மிரட்டல்

டெல் அவிவ், ஒக். 04

இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்திய நிலையில், இஸ்ரேலுக்கு முழு ஆதரவாக இருப்போம் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார். இதேவேளை, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு ஈரான் கொலை மிரட்டல் விடுத்துள்ளதால் மத்திய கிழக்கு பகுதியில் போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளது. (எ)

# தெற்கு லெபனானை விட்டு உடனடியாக வெளியேறவும்

## மக்களுக்கு இஸ்ரேல் எச்சரிக்கை

ஜெருசலேம், ஒக். 04

தெற்கு லெபனானில் இரண்டு கிராமங்களில் உள்ள மக்களை பாதுகாப்பு கருதி உடனடியாக வீடுகளை விட்டு வெளியேறுமாறு இஸ்ரேல் இராணுவம் மீண்டும் எச்சரித்துள்ளது.

"ஹிஸ்புல்லாக்களின் நடவடிக்கை, இஸ்ரேல் இராணுவத்தை அதற்கு எதிராக செயல்படத் தூண்டியுள்ளது. இஸ்ரேல் இராணுவம் உங்களை (கிராமத்தினரை) துன்புறுத்த விரும்பவில்லை. உங்களின் பாதுகாப்பு காரணங்களுக்காக உங்கள் வீடுகளை விட்டு நீங்கள் உடனடியாக வெளியேற வேண்டும். ஹிஸ்புல்லாக்களின் நடமாட்டம், அவர்களின் இடங்கள், ஆயுதக் கிடங்குகளுக்கு அருகில் இருப்பவர்கள் தங்களின் உயிரைப் பணயம் வைக்கிறார்கள் என்று பொருள்" என்று இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேல் மீதான ஈரானின் தாக்குதலுக்கு பின்பு இந்த விடயத்தில் அமெரிக்காவை தலையிட வேண்டாம் என்று ஈரான் எச்சரித்துள்ளது. இதுகுறித்து ஈரானின் வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அராக்சி கூறுகையில், "இந்த விவகாரத்தில் இருந்து விலகி இருக்குமாறும், இதில் தலையிட வேண்டாம் என்று அமெரிக்காவை நாங்கள் எச்சரித்துள்ளோம்"என்று கூறினார். சுவிடன் நாட்டு தூதரகம் மூலமாக இந்தச் செய்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பைடனின் மோசமான நிர்வாகம் 3ஆம் உலகப் போருக்கு காரணம்

## டொனால்ட் ட்ரம்ப் குற்றச்சாட்டு

வாஷிங்டன், ஒக். 04

"பைடனின் மோசமான நிர்வாகம்தான் மூன்றாம் உலகப் போர் ஏற்பட வழிவகுத்துள்ளது"- இவ்வாறு அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இஸ்ரேல் - ஈரான் இடையே ஏற்பட்டுள்ள மோதல் மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுப்பதாக அமைந்துள்ளது. இதற்கு, அமெரிக்க ஜனாதிபதி ஜோ



பைடனின் மோசமான நிர்வாகமே காரணம். நான் ஜனாதிபதியாக இருந்தபோது ஈரான் முழு கட்டுப்பாட்டில் இருந்தது. அவர்களுக்கு எப்போதும் பண நெருக்கடி இருந்தது. இதனால், ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதில் மட்டுமே அவர்கள் குறியாக இருந்தனர். ஆனால், கமலா ஹாரிஸ் துணை ஜனாதிபதியானது முதல் ஈரானுக்கு பணத்தை வாரி இறைத்தார். இதனால், அவர்கள் தீவிரவாதத்தை ஏற்றுமதி செய்கின்றனர்.

எனது ஆட்சிக் காலத்தில் மத்திய கிழக்கு நாடுகளில் போர் என்பது இல்லை. அமெரிக்காவை வழிநடத்த திறமையில்லாத இருவரால் உலகம் இப்போது மூன்றாம் உலகப் போரின் விளிம்புக்கு இட்டுச் செல்லப்பட்டுள்ளது"- என்றார். (எ)

# மெக்சிக்கோவின் முதல் பெண் ஜனாதிபதியானார் ஷீன்பாம்

மெக்சிக்கோ சிற்றி, ஒக். 04

மெக்சிக்கோ நாட்டின் முதல் பெண் ஜனாதிபதியாக ஷீன்பாம் பதவியேற்றுள்ளார்.

2018ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று முதல் பெண் முதல்வர் என்ற பெருமையையும் ஷீன்பாம் பெற்றிருந்தார்.

மெக்சிக்கோ ஜனாதிபதித் தேர்தல் கடந்த ஜூன் மாதம் நடைபெற்றது. இதில் ஆளுங்கட்சியான மொரோனா கட்சி (இடதுசாரி) சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்தப்பட்ட கிளாடியா ஷீன்பாம் 60 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

இந்த நிலையில் 3 மாதங்களுக்கு பிறகு நடந்த பதவியேற்பு விழாவில் முதல் பெண் ஜனாதிபதியாக ஷீன்பாம் பதவியேற்றுக் கொண்டார். (எ)



# ஜப்பான் விமான நிலையத்தில் அமெரிக்க குண்டு வெடித்தது

ரோக்கியோ, ஒக். 04

ஜப்பானில் மியாசாகி விமான நிலையத்தில் புதைக்கப்பட்டிருந்த அமெரிக்க குண்டு புதன்கிழமை வெடித்துள்ளது.

குண்டு வெடிப்பினால் விமான ஓடுபாதையில் 23 அடி ஆழத்தில் பள்ளம் ஏற்பட்டுள்ளது.

500 பவுண்டுகள் எடையுள்ள அமெரிக்க குண்டே வெடித்தது என்பதை ஜப்பானின் தற்காப்புப் படையைச் சேர்ந்த குண்டு செயலிழப்புக் குழு உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த குண்டு இரண்டாம் உலகப் போரின் போது வீசப்பட்டதாகக் கருதப்படுகிறது.

# ஆற்றில் படகு கவிழ்ந்து 100 பேர் உயிரிழந்தனர்

அபுஜா, ஒக். 04

நைஜீரியாவில் ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 100 பேர் உயிரிழந்ததாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

அந்த நாட்டின் நைஜர் மாகாணத்தில் நைஜர் ஆறு உள்ளது. அந்த ஆற்றில் ஒரு படகு சென்றது. அந்தப் படகில் சுமார் 300 பேர் பயணித்தனர். இஸ்லாமிய மத விழாவில் பங்கேற்றுவிட்டு அனைவரும் படகில் வீடு திரும்பிக்கொண்டிருந்தனர்.

மொக்வா என்ற பகுதியில் இரவு 8 மணியளவில் சென்றபோது படகு ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் படகில் இருந்த அனைவரும் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டனர்.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் ஆற்றில் மூழ்கி பரிதவித்த 150 பேரை உயிருடன் மீட்டனர். ஆனாலும், இந்த விபத்தில் 100 பேர் உயிரிழந்ததாக முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது. ஆற்றில் அடித்து செல்லப்பட்டவர்களை தேடும் பணியும் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய மக்கள் சக்தி-ஐ.தே.க. பேச்சுவார்த்தை படுதோல்வி!

## ராஜித சேனாரத்ன கூறுகிறார்

கொழும்பு, ஒக். 04

**ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுவது தொடர்பிலான பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் பலமான கூட்டணியொன்றை அமைப்பது குறித்து ஆராய்ந்தோம். அதன் அடிப்படையில் ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து முதலாவதாக பிரிந்து சென்ற ஐக்கிய மக்கள் சக்தியினரை இணைத்துக்கொள்வதற்கு தீர்மானித்தோம்.

அது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. ஆனால் எமது அணியை தோற்கடிக்கும் வகையில் காலத்தை வீணடிக்கும் செயற்பாடுகளையே அவர்கள் முன்னெடுத்தனர்.

அதுமாத்திரமல்லாது எமது கட்சியின் அமைப்பாளர்களுடனும் இரகசியமாக பேசினர். கூட்டு உடன்படிக்கையின் அடிப்படையிலேயே நாம் பேச்சுவார்த்தையை முன்னெடுத்தோம். ஆயினும் அது தோல்வியில் முடிவடைந்தது.

ஜனாதிபதி தேர்தலின்போது எமக்கு ஆதரவளித்த உறுப்பினர்களுடன் நாம் களத்தில் இறங்குவோம். ஜீவன் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் கேஸ் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட இணக்கம் வெளியிட்டுள்ளது-என்றார். (அ)



# ஈச்சங்குளத்தில் இரவில் யானைகள் அட்டகாசம்

வவுனியா, ஒக். 04

வவுனியா ஈச்சங்குளத்தில் காட்டு யானைகளினால் ஒரே இரவில் பெருந்தொகையான தென்னை மரங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

இந்த அனர்த்தம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

நீர்த் தட்டுப்பாட்டு காலத்திலும் கஸ்டப்பட்டு தென்னை பயிருட்டு வளர்ந்திருந்த நிலையிலே யானைகளினால் இவ்வாறு அழிக்கப்பட்டுள்ளது. தங்களது வாருவாய் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வரவிருக்கும் பெரும் போக விவசாயத்தை யானையின் தாக்கத்துக்கு மத்தியில் எவ்வாறு செய்வது என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

எனவே இதற்கான சரியான தீர்வை தமக்கு பெற்றுத்தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ)

# கடன் மறுசீரமைப்புக்கு பிரித்தானியா உதவும்!

கொழும்பு, ஒக். 03

நேரடி வெளிநாட்டு முதலீடுகள் இலங்கை நோக்கி வரும் என்றும் கடன் மறுசீரமைப்பு செயல்பாடுகளுக்கு தமது நாட்டு அரசாங்கத்தின் ஒத்துழைப்பு கிடைக்கும் என்றும் இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் அண்ட்ரூ பெட்ரிக் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் இந்த சந்திப்பு ஒரு முக்கியமான முன்னெடுப்பாக அமைந்தது.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கைக்கு நேரடி வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கான முயற்சிகளுக்கு பிரித்தானிய அரசாங்கம் தொடர்ச்சியான ஆதரவை வழங்கும் என்று உறுதியளித்த பிரித்தானிய தூதுவர், கல்வித்துறை உறவுகளின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

அத்தோடு, சர்வதேச நாணய நிதியம் மற்றும் கடன் மறுசீரமைப்பு செயல்பாடுகளுக்கும் பிரித்தானிய அரசாங்கத்தின் உதவி கிடைக்கும் என்றும் அவர் உறுதியளித்தார். (எ)

# தமிழ்த் தேசிய அரசியலில் நிராகரிக்க முடியாத ஒரே ஒரு தரப்பு தமிழ் தேசிய மக்கள் முன்னணி!

## கஜேந்திரகுமார் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஒக். 04

தமிழ்த் தேசிய அரசியலில் இன்று நிராகரிக்க முடியாத ஒரே ஒரு தரப்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியே உள்ளது எனவும், தமக்கு மக்கள் மத்தியில் எதிர்ப்பு இல்லை எனவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பகுதியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வன்னி தேர்தல் தொகுதி செயற்பாட்டாளர்களுடனான கலந்துரையாடலிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வன்னி தேர்தல் தொகுதி செயற்பாட்டாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன் தினம் மாலை மாங்குளம் பகுதியில் இடம்பெற்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வன்னி தேர்தல் மாவட்ட பிரதான வேட்பாளர் தவபாலன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் வன்னி தேர்தல் தொகுதி வேட்பாளர்கள், வன்னி தேர்தல் தொகுதியின் செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு சமகால அரசியல் நிலைமைகள் எதிர்வரும் தேர்தலை தமிழ் தேசிய மக்கள் முன்னணி எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதோடு, வன்னி தேர்தல் தொகுதியில் தேர்தலுக்காக பணியாற்றுவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (அ)

# யாழ்.போதனாவின் கண் சிகிச்சை பிரிவுக்கு மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 04

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சுக்சி குறூப் கம்பனியினால் நான்கு மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வின் போது வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சை பிரிவுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சுக்சி குறூப் கம்பனியின் தலைவர் கணேசன் சுகுமாரின் ஏற்பாட்டில் அவரின் பிரதிநிதியாக வந்திருந்த இரத்தினசபாபதி இளங்கோவினால் வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சை நிபுணர் மலரவனிடம் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் உள்ளிட்ட வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், சுக்சி குறூப் கம்பனியின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த இரண்டு வருடத்திற்கு முன்னரும் சுக்சி குறூப் கம்பனியால் யாழ். போதானா வைத்தியசாலையின் மருத்துவ தேவைக்காக ஐந்து மில்லியன் ரூபா வழங்கப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரயிலுடன் மோதி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 04

அளுத்கம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹெட்டிமுல்ல ரயில் நிலையத்துக்கும் அளுத்கம ரயில் நிலையத்துக்கும் இடையில் ரயிலுடன் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார். மருதானையிலிருந்து ஹிக்கடுவை நோக்கி பயணித்த ரயிலில் மோதி குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவர், பேருவளை பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய நபர் என தெரியவந்துள்ளது.

சடலம் நாகொடை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் அளுத்கம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# குடிதண்ணீர் போத்தல்களின் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## உற்பத்தியாளர்கள் கோரிக்கை

கொழும்பு, ஒக். 04

சந்தையில் விற்பனை செய்யப்படும் குடிதண்ணீர் போத்தல்களின் விலையை குறைக்குமாறு தரப்படுத்தப்பட்ட குடிதண்ணீர் போத்தல் உற்பத்தியாளர் சங்கத்தின் செயலாளர் சுனில் அத்தப்பத்து கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் வாழ்வதற்கு குடிதண்ணீர் இன்றியமையாதது. வெளிநாடுகளைப் போலவே இலங்கையிலும் குடிதண்ணீர் போத்தல் விற்பனை அதிகரித்து வருகிறது.

அவற்றின் விலையை குறைக்குமாறு நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் வேண்டுகோள் விடுத்தோம். நாம் போத்தல்களில் அடைக்கப்பட்ட குடிதண்ணீரை உற்பத்தி செய்தாலும் கூட இடைத்தரகர்களால் அதிக விலை நிர்ணயிக்கப்படுகிறது.

உதாரணமாக, 90 முதல் 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் குடிதண்ணீர் போத்தலை 70 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியும். ஆகக்கூடிய 05 லீற்றர் குடிதண்ணீர் போத்தலில் 150 வீதமான இலாபம் பெறப்படுகிறது.

ஆதலால் குடிதண்ணீர் போத்தல்களில் விலையை குறைக்குமாறு நாம் விற்பனையாளர்களிடம் கோரிக்கை விடுக்கிறோம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி...

நேற்றுமுன்தினம் நாட்டுக்கு வந்த ஐ.எம். எவ். குழுவினர் ஜனாதிபதி அநுரகுமாரவே சந்தித்து நாணய நிதியத்தின் திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் ஆராய்ந்தனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் நோக்கங்கள் குறித்த கொள்கை அளவிலான அரசாங்கத்தின் பரந்துபட்ட உடன்பாட்டை மீள வலியுறுத்தியுள்ள ஜனாதிபதி இந்த நோக்கங்களை மக்களின் சுமைகளை குறைக்கும் மாற்றுவழிகள் ஊடாக அடைய வேண்டிய தேவையை வலியுறுத்தினார்.

மேலும், பொருளாதார ரீதியில் நெருக்கடிகளை சந்தித்துவரும் மக்களுக்கு வரி நிவாரணங்களை வழங்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார் என்று ஜனாதிபதி தரப்பு தெரிவித்தது. (ஐ)

## மதுபாவனையால்...

தெரிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டு மதுசாரம் மூலமாக ஆயிரத்து 650 கோடி ரூபாய் வருமானம் கிடைத்தது. ஆனால், அதே ஆண்டில் மதுசாரத் தால் ஏற்பட்ட பொருளாதார மற்றும் சுகாதார சீர்கேடுகளுக்காக 2 ஆயி ரத்து 370 கோடி ரூபாய் செலவிடப்பட்டது - என்று மதுசார ஒழிப்பு தினமான நேற்றைய தினம் அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடந்த...

சிலர் காலமானமை மற்றும் பதவி விலகல்கள் காரணமாக ஏற்பட்ட வெற்றிடங்களுக்காக குறித்த 19 பேர் நியமிக்கப்பட்டனர்.

தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றத்துக்குத் தெரிவான ஜயந்த கெட்டஹெொட பதவி விலகிய நிலையில் அவருக்குப் பதிலாக பஸில் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டார்.

பின்னர் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான அஜித் நிவாட் கப்ரல் பதவி விலகியதும் மீண்டும் ஜயந்த கெட்டகொட நியமிக்கப்பட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காகப் பதவி விலகிய நிலையில், அவருக்குப் பதிலாக ஏ.எச்.எம். பௌசி பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார். எனினும், அதன் பின்னர் நீதிமன்ற உத்தரவால் பாராளுமன்ற உறுப்புரிமையை இழந்த டயனா கமகேவுக்கு பதிலாக முஜிபுர் ரஹ்மான் மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றார்.

எவ்வாறாயினும் பாராளுமன்ற உறுப்புரிமையை இழந்த ஹரின் பெர்ணாண்டோவுக்கு பதிலாக பிறிதொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

இதேபோன்று, தேசியப் பட்டியல் மூலம் எம். பியான ரணில் விக்கிரமசிங்க முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய பதவி விலகியமையை தொடர்ந்து, ரணில் ஜனாதிபதியாக தெரிவானார். இதையடுத்து அவரின் இடத்துக்கு வஜிர அபேவர்த்தன நியமிக்கப்பட்டார்.

இந்த பாராளுமன்ற காலத்தில், 8 பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகினர். ரஞ்சன் ராமநாயக்க, டயானா கமகே ஆகியோர் தகுதி இழப்பு செய்யப்பட்டனர். தெரிவான கட்சியிலிருந்து வேறு கட்சிக்கு மாறியமையால் நசீர் அஹமட், மனுஷ நாணயக்கார, ஹரின் பெர்ணாண்டோ ஆகியோர் பதவி நீக்கப்பட்டனர்.

இரா. சம்பந்தன், அமரகீர்த்தி அத்துகோரள, சனத் நிசாந்த, எச். நந்தசேன ஆகிய 4 பாராளுமன்ற உறுப்பினர்கள் காலமாகினர்.

ஜனாதிபதிகளாக பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க, அநுரகுமார திஸநாயக்க ஆகியோருக்கு பதிலாக புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஒரு கோடி...

காணியை விற்றுவிட்டு இணுவிலிலுள்ள வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தார். சங்குவேலியில் அவர் வந்துகொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரின் பணப்பையை பறித்துச் சென்றனர்.

பணத்தைப் பறிகொடுத்தவர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். இதையடுத்து, விரைந்து செயல்பட்ட பொலிஸார் ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கும் தகவல் அளித்தனர். தொடர்ந்த விசாரணைகளில் கொடிகாமம், ஊரெழுவை சேர்ந்த 20, 22 வயது இளைஞர்கள் இருவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து ஒரு கோடியே 5 இலட்சம் ரூபாய், 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான யூரோ மற்றும் பெறுமதியான கைபேசி, கடவுச்சீட்டு என்பவற்றை மீட்டனர்.

இந்த வழிப்பறி சம்பவத்துக்கு மூளையாக காணியை விற்றுக் கொடுத்த தரகரே செயல்பட்டார் என்றும் அவரை கைது செய்து விசாரித்தபோதே ஏனைய இருவரையும் கைது செய்ததாகவும் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், கைதான மூன்று சந்தேக நபர்களையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## ஐ.தே.க...

தாங்குவார். ஆனால், அவர் தேர்த லில் போட்டியிட மாட்டார். 1977ஆம் ஆண்டின் பின்னர் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்காத பொதுத் தேர்தலும் இதுவாகும்.

புதிய ஜனநாயக முன்னணி என்ற பெயரில் களமிறங்கும் இந்தக் கூட்டணியில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்த தரப்பினர் களமிறங்குவர்.

நேற்று ரணில் விக்கிரமசிங்கவின் பணிமனையில் நடந்த கூட்டத்திலேயே இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன என்று தெரிய வருகின்றன.

இதேநேரம், இலங்கை தொழிலாளர் கட்சியும் சேவல் சின்னத்துக்கு பதிலாக சிலிண்டர் சின்னத்திலேயே களமிறங்கும் என்று அறிய வருகின்றது. (ஐ)

## இலங்கை...

கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந் திய பிரதி பணிப்பாளர் மீனாட்சி கங் குலி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் டவை வருமாறு,

இலங்கையில் புதிதாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பதவியேற்றுள்ளார். அவர் கடந்தகால ஜனாதிபதிகள் புரிந்த தவறுகளை சரி செய்ய வேண்டும். ஜனாதிபதி அநுர குமார கடந்த கால தீர்மானங்களை நிறைவேற்ற ஒத்துழைக்க வேண்டும். அத்துடன், அடக்குமுறை சட்டங்களை நீக்க வேண்டும்.

இலங்கையில் தண்டனைகளிலிருந்து விடுபட்டுக் கொள்ளுதல், பாதிக்கப்பட்டவர்களும் சாட்சியாளர்களும் அச்சுறுத்தப்படுதல், மனித உரிமைகள் செயல்பாட்டாளர்கள் இலக்கு வைக்கப்படுதல் போன்ற நிலைமைகள் இன்னும் தொடர்கின்றன.

இந்த நிலையில் இலங்கையை எதிர்வரும் 2 ஆண்டுகளுக்கு சர்வதேசத்தின் கண்காணிப்பில் வைத்துக் கொள்வதற்கான பிரேரணை கட்டாயமானதாகும். இந்தப் பிரேரணை, இலங்கையின் மனித உரிமைகள் நிலைமைகளை கண்காணித்து சர்வதேசம் அறிக்கைப்படுத்தும் வகையிலும் எதிர்கால வழக்கீடு நடவடிக்கைகளுக்காக ஆதாரங்களை திரட்டவும் இயலும் வகையில் அமைக்கப்பட வேண்டும்.

அதன் ஊடாக, சர்வதேச குற்றங்களை இழைத்தவர்களுக்கு என்றாவது ஒருநாள் தண்டனை கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த முடியும் - என்றுள்ளது. (ஐ)

## ஐ.தே.த...

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு தேர்தல் திணைக்களத்தால் தற்போது சங்குச் சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய வடக்கு, கிழக்கு முழுவதும் கூட்டணியாக சங்குச் சின்னத்தில் போட்டியிட உள் ளோம். இதேநேரத்தில் கொழும்பிலும் இம்முறை போட்டியிடுவது தொடர்பிலும் ஆராய்ந்து வருகிறோம்.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு ஒருமித்த தீர்மானமாக சங்கு சின்னத்தை அதில் அங்கம் வகித்த ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு வழங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இதனடிப்படையில், சங்கு சின்னத்தை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு வழங்குமாறு தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தோம். இந்தக் கோரிக்கையின் அடிப்படையில் எமக்கு சங்கு சின்னத்தை தேர்தல்கள் திணைக்களம் ஒதுக்கியுள்ளது - என்றும் கூறினார்.

இதேவேளை, இம்முறை தமிழ் அரசுக் கட்சி, ஈ. பி. டி. பி. கட்சிகளும் கொழும்பில் போட்டியிடுவதற்கு திட்டமிட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எமது...

கேள்வி எழுப்பினர்.

மேலும், 8 மாவட்டங்களின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளாகிய நாம் சர்வதேசத்திடம் நீதி கோரிய எமது போராட்டமானது பல இன்னல்களையும் துன்பங்களையும் சுமந்த போராட்டமாக 15 வருடங்கள் கடந்துள்ளன.

மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசிடம் பல வழிகளிலும் நீதி கேட்டு நின்றோம். நீதி கிடைக்காத நிலையில் சர்வதேச நீதியை தேடி 2018ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை ஜெனிவா மற்றும் ஏனைய நாடுகளுக்கு சென்று வருகின்றோம்.

இந்நிலையில் சர்வதேச சிறுவர் தினத்தன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளுக்கு சர்வதேச நீதி கோரி கவனவீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டோம்.

போராட்டம் நடந்துகொண்டிருந்த போது போராட்ட இடத்துக்கு வந்த ஒரு நபர் தான் அநுரவின் ஆள் எனவும் இங்கு போராட்டம் செய்யவேண்டாம் எனவும் எச்சரித்தார். அதற்கு தாய்மார் இது ஜனநாயக போராட்டம். நாம் இதை ஏன் நிறுத்த வேண்டும் என்று கேட்டனர். அதற்கு அந்த நபர் மிகமிக மோசமான வார்த்தைகளை பயன்படுத்திகத்தினார். அவருடைய தொனியில் எமது போராட்டத்தை குழப்புவதற்காக அனுப்பப்பட்ட ஒருவராக எமக்கு தெரிந்தது.

இதையெல்லாம் கதைக்க நீர் யார் என்று கேட்ட போது, அந்த நபர் நான் அநுரவுடன் ஒன்றரை வருடமாக இருக்கிறேன். அவர் ஜனாதிபதியாக வந்துவிட்டார். அதனால் உங்களை போராட்டம் செய்ய விடமாட்டேன் என்று இறுமாப்புடன் கூறினார். அதுமட்டுமல்ல, உங்களை எல்லாம் கைது செய்யப் போகிறேன் என்று தகாத வார்த்தைகளால் பேசி எமது தாய்மாரை மன உளைச்சலுக்கு உள்ளாக்கினார்.

இவர் ஜனாதிபதி அநுரவின் ஆளோ அல்லது பொலிஸாரின் ஆளோ அல்லது புலனாய்வுத்துறையின் ஆளோ அல்லது வேறு யாருடைய ஆளோ என்று தெரியாது. இங்கு குழப்பத்தை ஏற்படுத்தியவருக்கும் அவரை இயக்குபவருக்கும் நாம் வன்மையான கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், எமது போராட்டத்தை குழப்ப வரும் எவரானாலும் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். நாம் உறவுகளை உயிருடன் ஒப்படைத்து விட்டு அவர்களை தேடிக்கொண்டிருக்கின்றோம் - என்றும் கூறினர். (ஐ)

## கிளிநொச்சி...

ராஜேந்திரன் கௌதமன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் பஸ்ஸின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட் டுள்ளதுடன் தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## ஊழல்...

விடயங்களை சாதித்திருக்க முடியாது.

ஜப்பானின் சீர்திருத்த தலைவர்கள் சர்வதேச அழுத்தத்தின் காரணமாக புத்திசாலித்தனமான முடிவுகளை எடுத்தார்கள். இலங்கை இன்று சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையின் கீழ் பொருளாதார அமைப்பு முறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளமுயல்கின்றது. வரி சீர்திருத்தம், மின்சார சீர்திருத்தம் போன்றவை சவாலானவை - மக்களின் ஆதரவற்றவையாக காணப்படலாம்.

எனினும், இவ்வாறான வெளிநாட்டு அழுத்தங்களை நாட்டின் சிறந்த எதிர்காலத்துக்காக பயன்படுத்துவதை பலவீனமாகக் கருதக்கூடாது. மாறாக தலைவர்களின் புத்திசாலித்தனத்துக்கான சான்றாக கருதவேண்டும்.

2022 இல் இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்ததை தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்ட 11 கடன் திட்டங்களை ஜப்பான் சமீபத்தில் மீண்டும் ஆரம்பித்துள்ளது. உலகின் வேறு எந்த நாட்டுக்கும் முதல் ஜப்பான் இதனை செய்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடனும் இலங்கைக்கு கடன் வழங்கிய ஏனைய நாடுகளுடனும் இலங்கை செய்துகொண்ட உத்தியோகபூர்வ உடன்படிக்கையின் அடிப்படையிலேயே ஜப்பான் இந்தத் திட்டங்களை மீள ஆரம்பித்துள்ளது என்பதை கருத்தில்கொள்வது அவசியம்.

இலங்கை தற்போது முக்கியமான திருப்புமுனையில் உள்ளது. பொருளாதார நெருக்கடியை வளர்ச்சியை நோக்கி மாறுவதற்கான வாய்ப்பாக பயன்படுத்தலாம்.

ஊழலை ஒழிப்பது குறித்து தீவிர அர்ப்பணிப்புள்ள தலைவரை இலங்கை மக்கள் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்துள்ளதால் இலங்கைக்கு நீண்டகாலமாக பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வந்துள்ள இந்தத் தீமைக்கு தீர்வு காண்பதற்கான சிறந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது.

நான் இங்கு பணியாற்ற வந்த பின்னர் இலங்கையின் அரசியலை உன்னிப்பாக அவதானித்தவன் என்ற அடிப்படையில் ஊழல் தொடர்பான இரண்டு விடயங்களை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இலங்கை மக்கள் தங்கள் தலைவர்களை வெறுப்பதற்கு ஊழல் ஒரு காரணமாக உள்ளது. மேலும், தலைவர்கள் ஊழல் மிகுந்தவர்களாக இருக்கும்போது பொறுப்புணர்வுள்ளவர்களாக தாங்கள் இருக்க வேண்டும் என மக்கள் சிந்திக்கும் நிலையை அது ஏற்படுத்தாது. தலைவர்கள் ஊழல்வாதிகளாக காணப்படும் போது வரி செலுத்த வேண்டியவர்கள் வரி செலுத்துவதை தவிர்க்க முயலக்கூடும்.

இரண்டாவது இலங்கை வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொள்ள முயலும் போது இது பாதகமான விதத்தில் தாக்கம் செலுத்தும்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையை பெறுவதற்கு வெளிப்படையான எதிர்வுகூறக்கூடிய வர்த்தக சூழல் அவசியம். ஜப்பானிய நிறுவனங்கள் தற்போது தங்கள் கடப்பாடுகளை பின்பற்றுவதில் மிகவும் இறுக்கமாக காணப்படுகின்றன. இதன் காரணமாக அவர்கள் இலஞ்சம் பெறுவதில்லை.

இலங்கையில் ஊழல் கலாசாரம் நீடித்தால் ஜப்பானின் முதலீடுகள் வருவதற்கான வாய்ப்புகள் இல்லை என்றே தெரிவிப்பேன். இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்காக அதிகளவு ஜப்பானிய முதலீடு கிடைப்பதை விரும்புவதால் நான் இதனை தெரிவிக்கின்றேன். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Eelanadu ஈழநாடு

## தஹாம் சிறிசேன, ராஜிகா மவ்பிம ஜனதாவில் இணைவு

கொழும்பு, ஒக். 04

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹாம் சிறிசேன மற்றும் பொதுஜன பெரமுன வின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜிகா விக்கிரமசிங்க ஆகியோர் நேற்று மவ்பிம ஜனதா கட்சியில் இணைந்துள்ளனர்.

கொழும்பில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் வைத்து அவர்கள் மவ்பிம ஜனதா கட்சியில் இணைந்த னர். பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்றத்துக்கு பிரவே சித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜிகா விக்கிரமசிங்க, மவ்பிம ஜனதா கட்சியின் கேகாலை மாவட்ட மற்றும் தெதிகம அமைப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேநேரம், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹாம் சிறிசேன, பொலனறுவை மாவட்ட மவ்பிம ஜனதா கட்சியின் அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, பொலனறுவை மாவட்ட இணைப்பா ளராக சமிந்து குமாரசிங்கவும், கண்டி மற்றும் உடுநுவர மாவட்ட இணைப்பாளராக தக்சில பிரேமசிறியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கண்டி ஹேவாஹெட்ட அமைப்பாளராக சஞ்சீவ சுரவீரவும், கண்டி யட்டிநுவர அமைப்பாளராக தக்சில செனவிரத்னவும் ரத்கம அமைப்பாளராக துசித திலங்க ஜயசிங்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

## பாதுகாப்பு அமைச்சு செயலருடன் படைகளின் பிரதானிகள் சந்திப்பு!

கொழும்பு, ஒக். 04

பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி, முப் படை தளபதிகள் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் ஆகியோர், பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் தூயகொந்தாவை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்த சந்திப்பு பாதுகாப்பு தலைமையகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

தனித்தனியாக இடம்பெற்ற இந்த சந்திப்பின்போது பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரி யந்த வீரசூரிய ஆகியோரே பாதுகாப்பு செயலாளரை மரியாதை நிமித்தம் சந்தித்தனர்.

இச்சந்திப்புகளின் போது பாதுகாப்புச் செயலாளர், பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் சுமுகமாக கலந்துரை யாடினார். (அ)

# மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதற்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சதி!

### சரத் வீரசேகர குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 04

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிப் பதற்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சதி இடம்பெற்றதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரி வித்துள்ளார்.**

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளி யிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேசியவாதத்தில் அக் கறை கொண்டிருந்தார். ஆதலால் அவரை தோற்கடிப்பதற்கு உள்நாட் டிலும் வெளிநாடுகளிலும் சதி இடம்பெற்றது.

அதில் அமெரிக்காவும் முக்கிய பங்கு வகித்தது.

நாட்டின் தற்போதைய ஜனாதி பதி ஊழல், மோசடிகளை ஒழிப்பதா கவும் ஊழலில் ஈடுபட்டோருக்கு தண்டனை பெற்றுக்கொடுப்பதாக வும் உறுதியளித்துள்ளார். அதனை நம்பியே மக்கள் வாக்களித்துள்ளார் கள்.

அநுர குமார திசாநாயக்க மகிந்த ராஜபக்ஷ மீது பாரிய குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார். பெருந்தொகை யான டொலர்களை விமானத்தில் ஏற்றி உகண்டாவுக்கு அனுப்பிய தாக கூறியிருந்தார். அதனை நிரூபிக் குமாறு நான் கோரிக்கை விடுக்கிறேன்.

அவ்வாறு பணம் கொண்டு செல்லப்பட்டிருந்தால் அது தொடர்பான விவரங்களை இப் போதைய ஜனாதிபதியால் கண்டு பிடிக்க முடியுமல்லவா? அந்தப் பணத்தைக் கொண்டு பொருளா தார நெருக்கடியை தீர்க்கலாம் அல் லவா? ஆதலால் அதனை உறுதிப் படுத்துமாறு நான் கேட்கிறேன்- என்றார். (அ)

# கோழித்தீவனம், மருந்து விலை குறைந்தால் முட்டை விலை மேலும் குறைவடையலாம்!

கொழும்பு, ஒக். 04

முட்டை விலை குறைவடைந்து வரும் நிலையில், கோழித் தீவனத் தின் விலை அதிகரிப்பால் தங்களது தொழிலைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதா கச் சிறிய அளவிலான முட்டை உற்பத்தி நடவடிக்கை யில் ஈடுபடுபவர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது சந்தையில் முட்டை ஒன்று 28 முதல் 30 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப் படுகிறது.

கோழித்தீவனம் மற்றும் மருந்து களின் விலை குறைக் கப்படுமானால் முட்டையினை மேலும் குறைந்த விலை யில் வழங்க முடியும் என முட்டை உற்பத்தியாளர்கள் தெரி விக்கின்றனர்.

அவ்வாறு, கோழித்தீவனம் மற்றும் மருந்துகளின் விலை குறைக்கப்படாத நிலையில், முட்டை உற்பத்தி தொழிற்துறை முற்றாக வீழ்ச்சியடையும் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதனிடையே, கோழிகளுக்கு வழங்கப்படும் தீவனம் மற்றும் மருந்துகளின் விலை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கால்நடை வள அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

கோழித் தீவனத்திற்காக இறக்குமதி செய்யப்படும் சோளத் தினை அரசாங்கத்தின் தலையீட்டுடன் குறைந்த விலையில் உற்பத்தியாளர்களுக்குப் பெற்றுக் கொடுப்ப தற்கு இதன்போது இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

அத்துடன், சோளத்திற்கான இறக்குமதி வரியைக் குறைப்ப தற்கும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி நட வடிக்கை எடுக்கப்படும் என அமைச்சின் செயலாளர் உறுதி யளித்துள்ளதாகக் கோழிப்பண் ணையாளர்கள் பாதுகாப்பு அமைப்பு ஒன்றியத்தின் ஒருங்கி ணைப்பா ளர் சஞ்சீவ கருணாசேகர தெரிவித்துள்ளார். (அ)

## மத்திய வங்கி ஆளுநர்களின் ஓய்வூதிய கொடுப்பனவு ரத்து!

கொழும்பு, ஒக். 04

இலங்கை மத்திய வங்கி ஆளுநர்களின் ஓய்வூதிய கொடுப்பனவு இரத்து செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் காலங்களில் முன்னாள் ஆளு நர்கள் மற்றும் எதிர்கால ஆளுநர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கப்பெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள் ளது.

இலங்கை மத்திய வங்கி விடுத்துள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் இந்த விடயம் குறிப்பிடப் பட்டுள்ளது. (அ)

# ஐ.எம்.எவ். உயர்மட்ட குழு அநுர அரசுடன் சந்திப்பு!

கொழும்பு, ஒக். 04

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவுக் கும் புதிய அரசாங்கத்தின் சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள பொருளாதாரக் குழுவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன் தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத் துடன் இணைந்ததாக ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க தலைமையிலான புதிய அரசாங்கத்தின் எதிர் கால செயற்திட்டம் குறித்து ஆராய்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்டக் குழுவொன்று நேற்று முன் தினம் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

சர்வதேச நாணய நிதிய திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் 2.9 பில்லியன் டொலர் நீட்டிக்கப்பட்ட நிதி வசதியின் நான்காவது தவணையை பெறுவது பற்றி ஆராய்வதே இந்த விஜயத்தின் நோக்கமாகும். இந்த நிலையில் நேற்று முன் தினம் பிற்பகல் பொருளாதாரக் குழுவினரை சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் சந்தித்தனர்.

இதன்போது சர்வதேச நாணய நிதியத்துக்கும் இலங் கைக்கும் இடையிலான வேலைத்திட்டம் தொடர்பில் இருதரப்பும் மீளாய்வு செய்ததோடு அதன் எதிர்காலச் செயற்பாடுகளுக்கான திட்டங்கள் குறித்தும் கருத்துக் கள் முன்வைக்கப்பட்டன.

இலங்கை தொடர்பான சாதகமான அணுகு முறையை அதிகரித்து தற்போதைய அரசாங்கத்தின் கீழ் நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய சீர்திருத் தங்கள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் பாராட்டுத் தெரிவித்தனர்.

சர்வதேச நாணய நிதிய தூதுக்குழுவில் சிரேஷ்ட தூ துக் குழு தலைவர் டாக்டர் பீற்றர் ப்ரூவர், வதிவிடப் பிரதிநிதி கலாநிதி சர்வத் ஜஹான் மற்றும் பொருளாதார நிபுணர் மானவி அபேவிக்ரம ஆகியோர் இடம்பிடித்த தோடு, இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, ஹர்சன சூரியப்பெரும, பொருளாதாரக் கொள்கைப் பேரவை யின் தலைவரும் பொருளாதாரம் தொடர்பான ஜனாதி பதியின் சிரேஷ்ட ஆலோசகருமான டாக்டர் அனில் ஜெயந்த, பொருளாதாரக் கொள்கை தொடர்பான பேரவையின் பிரதான உறுப்பினர்களான சுனில் ஹந்துன்நெத்தி, பேராசிரியர் சீதா பண்டார ரணதுங்க, சுனில் கமகே, ஜனாதிபதி சிரேஷ்ட ஆலோசகர் துமிந்த ஹலங்கமுவ, கலாநிதி நந்தசிறி கிஹிம்பியஹெட்டி, பேராசிரியர் ஓ.ஜி.தயாரத்ன பண்டா, அமரசேன அத்து கோரள ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

## அடுத்து நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்!

கொழும்பு, ஒக். 04

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான அறி விப்பை தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம். ஏ.எல். ரத்நாயக்கவின் கையொப்பத்துடன் இது தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

2023 உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் தொடர்பாக 22.08.2024 அன்று உயர் நீதிமன்றம் வழங் கிய தீர்ப்பை தேர்தல் ஆணைக்குழு உரிய மரியாதையு டன் கவனத்தில் எடுத்துக் கொண்டது என்றும் அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தேர்தல்கள் ஆணைக்குழு தனது பங்க ளிப்பை முழுமையாக புரிந்து கொண்டு இலங்கை மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்காக செயற்படுவதாகவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி உயர் நீதிமன் றம் வழங்கிய உத்தரவின்படி, சட்டத்தால் பரிந்துரைக் கப்பட்ட தேர்தலை நடத்துவதன் பங்கைக் கருத்தில் கொண்டு, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதி தியை விரைவில் நிர்ணயம் செய்ய ஆணைக்குழு செயல் படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, பாராளுமன்றத் தேர்தலுக்கு இடையே முன்னதாக தீர்மானிக்கப்பட்ட எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் எதிர்வரும் 26ஆம் திகதி நடத்த நடவ டிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.